காஞ்சி

11-2-68

காப்புத் தொப்பி

[பேராசிரியர் பி. ராமமூர்த்தி]

(நரம்பு மண்டல இரண சிகிச்சை நிபுணர், ஜெனரல் ஆஸ்பத்திரி சென்னை)

அவர் இளைஞர். ஆபீசுக்குப்போய்க் கொண்டிருந்தார். அதற்கு முதல்நாள்தான் அவருக்கு அந்த வேலை கிடைத்தது. நல்ல சம்பளம். நல்ல வேலை. பாதையில் ஒரு சைக்கிள் குறுக்கே வந்தது. மோட்டார்-சைக்கிளின் 'பிரேக்கை'ப் போட்டார். அவ்வளவுதான். அவருடைய ஆயுள் முடிந்தது. தலைகுப்புற முன்னால் விழுந்து மண்டை நொறுங்கிற்று. இது உண்மைக் கதை. அப்புறம், வேறொரு கதையும் நீங்கள் படித்திருப்பீர்கள். படித்து வருந்தியுமிருப்பீர்கள். புதிதாய் மணமான ஒரு பெண், கணவனுடன் மோட்டார்-சைக்கிளில் போய்க்கொண்டிருந்தாள். திடீரென்று ஓரிடத்தில் தவறி கீழே விழுந்தாள். மண்டை நொறுங்கி இறந்துபோனாள். இத்தகைய நிகழ்ச்சிகள் வருத்தத்தையும் வேதனையையும் அளிக்கின்றன. வாழ்வின் சிறந்த பகுதியாகிய இளமையில் உயிர் பறிக்கப்படுகிறது.

தொழில்வளம் மிக்க நாடுகளில் புற்றுநோயும், இதய நோய்களும் அதிகமாயிருப்பது எல்லோருக்கும் தெரியும். ஆனால் போக்குவரத்து விபத்துகள் அவற்றைக் காட்டிலும் முதலிடம் வகிக்கின்றன. அவற்றால் மரணமடைபவர்கள் தொகையே வெகு அதிகம். இந்த இருபதாம் நூற்றாண்டில் சாலைப் போக்குவரத்து துரிதமாகிவிட்டதால் போக்குவரத்து விபத்துகள் மரணத்துக்கு ஒரு பொதுவான காரணமாகிவிட்டன. சாலை விபத்துக்களைப் பற்றிச் சமீபத்தில் ஒரு கணக்கு எடுக்கப்பட்டது. அதிலிருந்து மரணத்துக்குப் பொதுவான காரணம், தலையில் ஏற்படும் காயமே என்று தெரிகிறது. இது டிரைவர்களைப் பொருத்தவரையில் 57 சதவிகிதமாகவும், பிரயாணிகளைப் பொருத்தவரை 63 சதவிகிதமாகவும் இருக்கிறது. இந்தப் புள்ளிவிவரம் மோட்டார் விபத்துகளுக்கு மட்டுமே உரியதாகும். மோட்டார் சைக்கிள் விபத்துகளிலும் ஸ்கூட்டர் விபத்துக்களிலும் இது இன்னும் அதிகமாகிறது. விபத்துக்குள்ளாகிறவர்களுள் 85 லிருந்து 90 சதவீதம்பேர் தலைக்காயத்தாலேயே மரணமடைகிறார்கள்.

மணிக்கு 30 மைல் வேகத்தில் ஒருவர் மோட்டார்-சைக்கிளில் போகிறாரென்று வைத்துக்கொள்வோம். திடீரென்று 'பிரேக்'போட வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. அப்போது என்ன நிகழ்கிறது? அவருடைய உடம்பு மேலேயும் முன்னாலேயும் தூக்கி எறியப்பட்டு, பின்பு 30 அடியிலிருந்து 50 அடிக்குள்ளாக சாலையில் எங்காவது ஓரிடத்தில் தலைகுப்புற விழும். பெரும்பாலும் தலைகுப்புற விழுந்து மூளையும் மண்டையோடும் நொறுங்கிப் போவதுதான் வழக்கம். தக்க சிறந்த காப்புத்தொப்பி அணிந்திருந்தால், அது அடியின் வேகத்தைத் தாங்கிக்கொள்ளும். அது மட்டுமல்ல மூளையில் ஏற்படும் காயம் கடுமையாகாமல், காக்கும். பின்புறம் அமர்ந்து செல்பவர்களுக்கும் இதைப் போலவே அதிக அபாயம், அவர்கள் தூக்கி எறியப்படுவதற்குத்தான் அதிக வாய்ப்பு இருக்கிறது. ஏனெனில், அவர்களுடைய பிடிப்பு உறுதியாய் இல்லை அல்லவா? முக்கியமாய் பக்கவாட்டில் உட்கார்ந்திருந்தால் கெட்டியாய் பிடித்துக்கொள்ள முடியாது, ஆனால் பக்கவாட்டில் உட்கார்ந்து போவதுதான் இந்தியப் பெண்களிடையே இன்று நாகரிகமாய்க் கருதப்படுகிறது.

தலை, மூளை—இந்த இரண்டும் காயமடைந்தால்தான் பொதுவாக மோட்டார்–சைக்கிள் விபத்துக்களில் பலர் சாகிறார்கள் என்பதை ஸர் ஹியூ கெய்ன்ஸ் என்னும் புகழ்பெற்ற பிரிட்டிஷ் இரண சிகிச்சை நிபுணர் இரண்டாவது மகாயுத்த காலத்தின் போதே கண்டறிந்தார், அவருடைய இடைவிடா முயற்சியின் விளைவாக ஒரு நல்ல பயன் விளைந்தது. இராணுவ அதிகாரிகளும், உள்நாட்டுப் பாதுகாப்பு வீரர்களும் மோட்டார்–சைக்கிளில் போகும்போது, காப்புத் தொப்பி அணிந்துகொள்ள வேண்டுமென்று பிரிட்டிஷ் அரசாங்கம் வற்புறுத்தியது. மோட்டர்-சைக்கிள் ஓட்டிச் செல்பவர்கள் காப்புத் தொப்பி அணியும் வழக்கத்தை மேற்கொண்டால், மரண விகிதம் பெரிதும் குறைகிறது என்பது தெரியவந்தது. அது மட்டுமல்ல! விபத்து ஏற்பட்டாலும்கூட அது அவ்வளவு கடுமையாயிருப்பதில்லை என்பது தெரிந்தது. ஆகவே பிரிட்டன், அமெரிக்கா ஐரோப்பா முதலிய நாடுகளில் பொதுமக்களிற் பலர் தாங்களாகவே தொப்பி அணியத் தொடங்கினார்கள். பின்பு சட்டமும் கொண்டு வரப்பட்டது. மேல் நாடுகள் பல காப்புத் தொப்பி அணிவதைக் கட்டாயமாக்கின. ஆசியாவில், ஜப்பானில் போக்குவரத்துப் பிரச்னைகள் பெருகவே, அந்நாடும் இவ்வழக்கத்தை அமலில் கொண்டு வந்தது.

நம் நாட்டின் தலையில் யாருக்காவது காயம் ஏற்பட்டதென்றால் அது உயர இருந்து தவறிக் கீழே விழுந்ததால் ஏற்பட்டதாயிருக்கும்; அல்லது, ஒரு கா[illegible]த்திலோ சச்சரவிலோ கிடைத்த அடியால் ஏற்பட்டதாயிருக்கும். சமீப காலம் வரை, இதுதான் போதுமான காரணமாயிருந்து வந்தது. ஆனால் கடந்த பதினைந்தாண்டுகளில் திட்டமான ஒரு மாறுதல் ஏற்பட்டிருப்பதை நாம் உணருகிறோம். பொதுவாக, தலையில் ஏற்படும் காயங்களுக்குப் போக்குவரத்து விபத்துக்களே இப்போது ஒரு காரணமாகி வருகிறது. குறிப்பாக, ஜனப்பெருக்கமுள்ள பெரிய நகரங்களுக்கும், தொழிற்சாலைகள் மிகுதியாயிருக்கும் பகுதிகளுக்கும் இது பொருந்தும். மோட்டார்—சைக்கிள்களிலும் ஸ்கூட்டர்களிலும் செல்பவர்கள் தொகையும் நம் நாட்டில் இப்போது பெருகியிருக்கிறது.

இத்தகைய விபத்துக்களில் பலியாகிறவர்களுள் பெரும்பாலோர் இளைஞர்கள் என்பது கவனிக்கத்தக்க விஷயமாகும். சற்று வயதானவர்கள் பொதுவாக வாலிப வயதினரைப்போல் மோட்டார் சைக்கிள்களையும் ஸ்கூட்டர்களையும் போக்குவரத்துக்குப் பயன்படுத்துவதில்லை அல்லவா? ஆகவே, மோட்டார்–சைக்கிள் விபத்தில் ஏற்படும் ஒவ்வொரு மரணமும் அதிக வேதனையையும் வருத்தத்தையும் அளிக்கிறது. ஏனெனில், பேரும், புகழும் பெறக்கூடிய சந்தர்ப்பம் நிறைந்த அரிய இளமைப் பருவம் 'நறுக்'கென்று துண்டிக்கப்பட்டு விடுகிறதல்லவா?

மூளை சேதமடைந்து, விபத்தில் தப்பிப் பிழைக்கிறானே, அந்த இளைஞனைப் பற்றி என்ன சொல்வது—அது மரணத்தைவிட இன்னும் கோரமானதாகும். இக்காலத்தில் மூளை-இரணசிகிச்சை பெரிதும் முன்னேறியிருக்கிறது, இதனால் மூளையில் காயமுற்ற நோயாளிகள் பல

(11-ம் பக்கம் பார்க்க)

அறிவிப்பு

பொங்கல் மலருக்குப் பிறகு, காஞ்சியின் 21-1-68, 28-1-68, 4-2-68 ஆகிய இதழ்கள் வெளியிடப்பெறவில்லை என்பதை எல்லா விற்பனையாளர்களுக்கும் நூல் நிலையங்களுக்கும், சந்தாதாரர்களுக்கும் தெரிவித்துக்கொள்கிறோம்.

—உரிமையாளர்.
'காஞ்சி''

ஆண்டு சந்தா ரூ. 10 ஆறுமாதம் ரூ. 5

மலர் 4 11—2—68 இதழ் 27, 28, 29

பிணைப்பறுக்காதீர்!

இந்தி என்ற வட்டாரமொழி, அனைத்திந்திய ஆட்சிமொழி என்ற அரசு அந்தஸ்துபெற்று, துணைக் கண்டம் முழுவதையும் அடிமைகொள்ள வகுத்துச் செயல்பட்டுவந்த திட்டம், இனி தமிழகத்தைப் பொறுத்தமட்டில் செல்லுபடியாகப் போவதில்லை என்பது நிச்சயம். இதற்கான தீர்மானத்தையும் தமிழக அரசு அண்மையில் நிறைவேற்றிவிட்டது.

இதன்பின் விளைவுகள் எப்படியாயினும், இந்தியினால் வரவிருந்த உடனடி அபாயம் தடுத்தாட்கொள்ளப்பட்டுவிட்டது தமிழகத்தில்.

தமிழ்நாட்டுக்குள்ளே இனியும் ஒருவர், இந்தி வேண்டும் என்று ஒரு போராட்டத்தைத் தொடங்க முன்வரக்கூடும் என்று நினைத்துப் பார்ப்பதுகூட சிறுபிள்ளைத்தனமானதாக இருக்கக்கூடும்.

நாட்டின் எதிர்காலம் பற்றி, தொலைதூரக் கண்ணோக்கில் கருத்தோட்டம் செலுத்தாமல், முன்னிலைச் செயல்களுக்கும் சந்தர்ப்பங்களுக்கும் மட்டுமே தன்னை ஐக்கியப்படுத்திக்கொள்ள வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு ஆளாக்கப்பட்ட காங்கிரஸ், இது விஷயத்தில் 'இடி' விழுந்துபோய்க் கிடக்கிறது!

மாணவர்தம் உள்ளத்து உணர்வைத் திட்டவட்டமாக எடுத்துக் காட்டு முன்பாக—ஆட்சி மொழிச் சட்டத் திருத்தம், திருத்தங்கள் பெற்று நிறைவேறிய பின்பு. உடன் ஒரு உள்நோக்கம் கொண்ட தீர்மானத்தையும் மைய அரசு நிறைவேற்றி வைத்துக் கொண்டதற்கு அப்புறம், காமராசர் அரசியல் கண்ணோட்டத்தோடு இந்தியைத் திணிக்க எடுக்கும் நடவடிக்கை குறித்தும், தீர்மானம் குறித்தும் கண்டிக்கத் தொடங்கியதற்குப் பின்பு தமிழகக் காங்கிரசும் இந்தி எதிர்ப்பு நாடகம் நடத்திக் காட்டியது; திரை அறுந்த காரணத்தாலோ என்னவோ அதனையும்கூட முழுமையாக—புத்தி பூர்வமானதாகச் செய்து காட்டிவிடவில்லை.

தமிழக அரசின் இந்தி ஒழிப்புத் தீர்மானத்திற்குப் பிறகு பேசுவதன் பொருளைக்கூட சிந்தித்துப் பாராமல் கண்ட கண்டபடியாகப் பேசியும் எழுதியும் வரும் நிலை. உள்ளபடியே நாட்டின் ஆரோக்கியமான ஒரு அரசியலுக்கு உகந்ததாக இருக்க முடியாது.

மும்மொழித் திட்டம் என்ற நச்சு மருந்தின் தீமையைப் புரியும் விதத்தில் மக்கள் முன் எடுத்துவைக்க தமிழகக் காங்கிரசுக் கட்சியே முன்வந்தால்தான், இனி அதன் அரசியல் தமிழகத்தில் விலைபோக முடியும்.

இந்நிலையில், இந்தி எதிர்ப்புத் தீ, ஆந்திரத்தில், கர்னாடகத்தில், கேரளாவில்—வங்காளத்தில்கூட பரவத் தொடங்கிவிட்ட நிலையையும், அதன் விளைவாக மக்களது உயிர், துப்பாக்கி முனையின் முன்கொண்டு நிறுத்தப்படும் அவலத்தையும் வேதனையோடுதான் சந்திக்க வேண்டி இருக்கிறது,

மொத்தத்தில் 'இந்தி' இனி எந்த இடத்தில் வைக்கப்பட வேண்டும் என்ற சிந்தனைக்கு மத்திய அரசு உடனடியாக வந்தால் மட்டுமே, இனி இந்தியத் துணைக் கண்டம், அமைதியான ஒரு சூழலுக்கு மீண்டு வர முடியும்.

அல்லாமல், இந்தியை எதிர்க்கிற அல்லது ஒழிக்கிற காரணத்தைக் காட்டி மத்திய அரசு மாநிலங்களுக்குத் தருகிற உதவிகளை நிறுத்திக் கொள்ளவோ, அல்லது குறைக்கவோ கூடியவாறு தன் சிந்தனையைச் செலவிடுமானால், மத்திய அரசு, தன் ஆட்சிக் காலத்துக்கு வயது வரம்பு நிர்ணயித்துக் கொள்கிறது என்பதுதான் பொருளாக இருக்க முடியும்.

மத்திய அரசின் வாழ்வெல்லாம், மாநிலங்களின் வருவாய்களைப் பறித்துக்கொண்டு போகிற ஒரே ஒரு காரணத்தால் மட்டுமே அமைந்ததாகும். இந்த தெளிந்த தெள்ளிய உண்மையை மறந்து அல்லது மறைத்துவிட்டு உதவிகளை நிறுத்துவது போன்ற சிந்தனைகள், எதிர்காலத்துக்கு உகந்ததாக இருக்காது. ஒருமைப்பாட்டை உண்டாக்குவதாகவும் ஆகாது.

கொள்ளைபோவதைப் பார்த்துக்கொண்டு—எடுத்துக்கொண்டு சென்றதில் உரிய பங்கு கொடுக்கப்படவில்லையானால் கொள்ளைக்காரர்களுக் குள்ளேயே கூட பகை வளரும்; பூசல் முற்றும்.

அதுபோலவே, மாநில வருவாய்களில் வாழ்வு நடத்தும் மத்திய அரசு, மாநிலங்களுக்குரிய பங்கினைப் படைப்பதில் தயக்கம் காட்டக்கூடாது. அனுமதிக்கவும் கூடாது! அதுவும் மொழியை இந்தியைக் காரணம் காட்டி—உதவித் தொகை நிறுத்தத்துக்கு முன்வருமானால் மத்திய அரசே, அந்தந்த மாநிலங்களைத் தன் பிணைப்பிலிருந்து விடுவிக்கிறது என்ற பொருளைப் பெற முடியும்!

நிலைமை இவ்வாறு இருக்க, துணைப் பிரதமர் மொரார்ஜி அவர்கள் இதுதொடர்பான செய்தியாளர்கள் வினாவிற்குப் பதிலளிக்கும்போது 'நடவடிக்கைகள் எடுப்பது மத்திய அரசு யோசிக்கிறது' என்றும், 'இது பற்றியெல்லாம் வெளிப்படையாகப் பேச முடியாது' என்றும் சொல்லுகிற அளவுக்கு முன் வருவதை. அவர் அச்சுறுத்துகிறார்—என்றுதான் எடுத்துக்கொள்ள முடியும்.

நிதர்சன நிலைக்குப் புறம்பாக நடப்பதும், மக்களின் ஏகோபித்த தீர்ப்புக்குக் கட்டுப்பட மறுப்பதும் ஜனநாயகக் கோட்பாட்டுக்கு உட்பட்டது என்று அறிவாளர்கள் யாரும் ஒப்புக்கொள்ள மாட்டார்கள்.

எதிர்காலத்தில் அரசியல் நடத்தவிரும்பும். தமிழகக் காங்கிரஸ், தன் எதிர்காலத்தை எண்ணியாவது, மத்திய அரசின் இத்தகு போக்கைத் தீவிரமாக எதிர்க்க முன்வர வேண்டும்! வருமா?

இன்ப ஒளி

அண்ணாதுரை

முன் கதை:

"பெற்றோம் விடுதலை" என்ற பேச்சு அளித்திடும் இன்பத்துக்கு ஈடாக வேறெதுவும் இருந்திட முடியாது. அந்த இன்பத்தை எண்ணி எண்ணி இதயங்கள் மகிழ்ச்சியிலே பாடும் பள்ளுக்கு வகுக்கப்படும் பாதைதான் எத்தனை எத்தனை வழிகளில், எத்தனை எத்தனை துறைகளில் எதிரொலிக்கிறது! நாட்டு மக்களில் பலதரப்பட்டவர்களும் கூடி விடுதலை விழாவினைக் கொண்டாடிக் களிக்கிறபோது யார்தான் அதனைத் தடுத்து நிறுத்திட வல்லார்!

மிடிமை ஒழிந்தது! பகை தொலைந்தது! வறுமை அழிந்தது! வாட்டம் தீர்ந்தது! வாழ்வு கிடைக்கும்!! வளம் சுரக்கும்!! என்ற பெருமிதத்தில் மலைநாடு விழாக்கோலம் பூணுகிறது.

மலைநாட்டுப் பாதுகாவலன் விக்கிரமன் எதிரி முகாமை பூண்டறச் செய்த வெற்றிச் செய்தியோடு. அந்தப் போரில் மாற்றுரை மண்டியிடச் செய்த பேறு பெற்ற வீரவாளை, மலைநாட்டு மன்னன் பத்தாண்டுச் சிறுவன் குமாரவேலனின் பாதகமலங்களில் பெருமையோடு படைக்கிறன்.

போரில் ஈடுபட்ட வீரர்களுக்கும், சிறப்புப் பதவிகள் ஏற்றுச் செயல்பட்டவர்களுக்கும் மன்னன் குமார வேலன், வீரப் பட்டங்களும். வீரப் பதக்கங்களும் கொடுத்து கௌரவிக்கிறன்.

அதுகண்டுப் பூரித்த அரசவை, மன்னன் குமாரவேலனுக்கு வாழ்த்தொலி எழுப்ப, அது விண் எட்டி நிற்கிறது.

இதன், எதிரொலியாக நாடு, நகரெங்கும் விழாக்கோலம்! ஒவ்வொரு துறையினரும் தங்கள் தங்கள் துறையின் இயல்பிற் கொப்ப விழாவெடுத்து மகிழ்கின்றனர்.

போர்க்களம் சென்று மீண்டோர், தத்தமக் குரியாரோடு போர் அனுபவங்கள் பற்றிப் பேசிக் களிக்கின்றனர்; ஒருவர் புரிந்த வீரசாகசங்கள் பற்றி மற்றவர் விமர்ச்சித்துப் பூரிக்கின்றனர்!

புதுப்போர் கண்டோரின் போக்கு இப்படி! முன்னுள் போர்வீரர்கள் மட்டும் என்னவாம்! தங்கள் தங்கள் முன்னுள் அனுபவங்களுடன் இந்நாள் அனுபவத்தை ஒப்புமை கண்டு உவக்கின்றனர்.

அத்தகையோரில் இருவர் மாந்தோப்பாரும், முல்லையூராரும். வாழ்ந்து தீரவேண்டிய வயதைக் கடந்து விட்டவர்கள்.

மாந்தோப்பாரின் மக்கள் மூவரும், முன்னுளில் நடைபெற்ற மாடூர் போரில் ஈடுபட்டு விழுப்புண்ணேடு புகழ் பொறித்துப் போயினர். அந்த ஏக்கத்தால், தள்ளாமையில் தள்ளாடுகிறுர் அவர்.

முல்லையூராரும் அப்படித்தான்! மக்களை அனுப்பவில்லை—மாருக தானே அந்த மாடூர் போரில் கலந்து கொண்டவர். தனது போர் பற்றிய அனுபவங்களை யெல்லாம் ஒரு நூலாக எழுதி வைத்திருக்கிறுர்.

முதியவர் இருவர்களது பேச்சும் மாடூர் போர்பற்றித் தொடங்கியதும் பெருமை பிடிபடவில்லை முல்லையூராருக்கு. தன் மகள் கொண்டலழகியைக் கூப்பிட்டு மாடூர் போர் பற்றிய வீரகாவியத்தைப் படிக்கச் சொல்கிறுர். கொண்டலழகி படிக்கிறுள்:

"மாடூருக்கும், எழிலூருக்கும் போர் தொடங்கிவிட்டது. எழிலூர் மக்களது நலத்தையும் வளத்தையும் சுரண்டிக் கொழுத்து வந்த சுவையில், மீண்டும் மாடூர் தாக்குதலைத் தொடங்கிவிட்டது.

எழிலூர் மக்களின் நல்வாழ்வுக்காகவே தன்னை வாழ்வித்துக்கொண்டிருக்கும் மறவர் படை, இது கண்டு கொதிக்கிறது.

கணவாய் முகத்தில் இருதரப்புப் படைகளும் சந்திக்கின்றன; மறவர்படை, வீரத்தில் சளைக்காதது! விவேகம் நிரம்பிய கூர்த்த மதி கொண்டது.

மாடூர் படை, வீரத்தின் துணைகொண்டு மறவர் படையை வீழ்த்த முடியாதென்று, சூழ்ச்சித்திறன் மேற் கொள்கிறது.

வாளொடு வாள் மோதும்போது, எதிரியின் கைவாள், தானுக ஈர்த்துக்கொள்ளப்படும் முறையில் காந்தசக்தி கொண்ட புதிய போர் ஆயுதம் கொண்டு போராட வருகிறது.

தருணத்தில் இதனைப் புரிந்துகொண்ட மறவர் படையின் தலைவர், படையின் ஒரு பகுதியைப் பிரித்து, எழிலூர் மக்களை கோட்டையூருக்குக் கொண்டுசெல்லப் பணிக்கிருர். ஒருபகுதி மாடூர் படையுடன் போரிடுகின்ற அதே வேளையில், மறுபகுதி மக்களது வாழ்வுக்கும் கற்புக்கும் ஊறு வராதபடி காக்கும் புனித முயற்சியில் அவர்களைக் கோட்டையூருக்குக் கொண்டு செல்ல முயல்கிறது.

சிங்கநாதன் என்பவன் இதனைக் காண்கிருன். படை பிரிந்து ஓடிவருவதைக் கண்டு கேலி பேசுகிருன்; உயிருக்கு அஞ்சிய கோழைகளா? என்று கேட்டு படை வீரர்களது ஆத்திரத்தைக் கிளருகிருன்.



சிங்கநாதன், சில காலத்துக்கு முன்பு எழிலூர் மறவர் படையில் அங்கம் வகித்தவன். மறவர் படை, மாடூர் படையுடன் போர் தொடுக்க வேண்டும் என்று துடியாய்த் துடித்தவன். போராட்டத் திட்டங்கள் எல்லாம்கூட வகுத்துக் கொடுத்தவன். தீட்டப்பட்ட திட்டங்கள் செயலுருப் பெற்றபோது சொல்லிக் கொள்ளாமல் படையைவிட்டே ஓடிப் போனவன் அவன். அப்படிப்பட்ட கோழை, எழிலூர் மக்களைக் காத்து, அவர்களைக்கோட்டையூர் சென்று குடியேற்ற_போகும்படைப்பிரிவைக் கண்டு கேலி பேசுகிருன்! கெக்கலி கொட்டிச் சிரிக்கிருன்! படையினரில் சிலர் நின்று அவன் வாதத்தைக் கேட்கின்றனர்! வீரம் கொப்பளிக்கும் உரை கேட்டு, தங்களுக்கு அவனையே தலைமையேற்க அழைக்கின்றனர்! அவன்தான்கோழையாயிற்றே! சிங்கநாதன் என்ருல் சிங்கம் போலச் சீறிப் போரிடுபவர் என்ற பொருளா என்ன? சிங்கநாதம் என்ருல் சிங்கம்போல கர்ஜனை செய்வதுதானே! அந்த கர்ஜனை போலியானது என்பதை அறிந்து, மறவர் படைப்பிரிவு, எழிலூருக்குள் புகுகிறது, மக்களை கோட்டையூருக்குக் கொண்டு செல்ல!

திறம்பட அந்தக் காரியம் முற்றுப் பெறுகிறது. எழிலூர் மக்கள், பாதுகாப்பு மிகுந்த கோட்டையூருக்குள் போய்ச் சேர்ந்து விடுகின்றனர்.

இனி?

எழிலூர் மக்களைச் சுரண்ட முடியாது; அவர்களை எதிர்க்க முடியாது என்று கண்டுகொண்டு மாடூர் பின்வாங்குகிறது.

மாடூர் படையை எதிர்த்து, மறவர் படை களவாயில் கொட்டிய இரத்தம் வீணுகிப் போய்விடவில்லை.

வீரம், விழலுக்கு இறைத்த நீராகிப் போய்விடவில்லை.

மறவர் படை, அழிக்கப்பட்டுப் போய்விட்டால் மஞ்சள் குளிக்கலாம் என்று எண்ணிக் கொண்டிருந்தவர்களுக்கும் எண்ணத்தில் மண் விழுந்தது!

வெற்றிச் சங்கு ஒலித்தது! கொடி பறந்தது! கொற்றம் நிலைத்தது!!

என்று கொண்டலழகி தான் படித்த கதையை முடிக்கிருள்.

இனி மேலே படிக்கலாம்:

2.
அலறல் கேட்டதேன்?

இனித்த பாலினும் தேனினும் இன்சுவைக் கனியினும் கட்டிக் கரும்பினும் இனித்திடுவது — இது எந்தையர் நாடு என்றிடும் பேச்சு.

எமது நாடு! எமது மலை! எமது காட்டு வளம்! எமது கடல் வளம்! எமது கழனி வளம்! எமது மன்னர் திறன்! எமது மறவர் திறன்! எமது புலவர் திறன்! — என்றெல்லாம் பேசிடுப்போதே ஓர் பெருமித உணர்ச்சி பொங்கிடும்—எங்கும்; எவர்க்கும்.

திருநாடு — எந்நாட்டினையும் அந்நாட்டவர் போற்றிடுவர் என்ற முறைக்கேற்றபடி மட்டுமல்ல—உள்ளபடி வளமும் வண்ணமும் நிரம்பிய நாடு. மக்கள் நல்வாழ்வு பெற்றிடுவதற்கு ஏற்ற இயல்பு நிரம்பிய நாடு. ஐந்து வகை நில இயல்பும் ஆங்கு காணக் கிடைத்தன.

பிடிபசி களைந்திட பெரிய கிளைகளை ஒடித்துத் தந்திடும் இடிகுரல் யானை உலவிடும் காடு, கவினுற ஒருபுறம் இருந்ததென்ருல், மற்ருேர்புறம், முதிரை, சாமை, வரகு போன்ற மணிகளைக் களத்திலிட்டுக் குவித்து போரடித்திடும் ஓசை கேட்டு மானினம் மருண்டு ஓடிடும்! பிறிதோர்புறம், செந்நெலை விதைப்போரும், நாற்றினை நடுவோரும், களைபறிப்போருமாக உள்ள உழவர் பெருங்குடி மக்கள், தொகை தொகையாக!

இயற்கை அழகு செயல்திறன் மிக்காரின் கைவண்ணத்தால் பன்மடங்கு பொலிவும், மிகுதியான பயனும்கொண்டதாகி, மக்களுக்குத் துணை செய்தது—திருநாடு எனும் மறவர் மிகும் நாட்டில்.

எல்லா வகையாலும் ஏற்றம் பெற்றிருந்த அந்நாட்டில், வாழ்க்கையே ஒருவிருந்தாகிவிட்டதனுல், மெள்ள மெள்ள ஓர் மனமயக்கம் மக்களிடம் ஏற்பட்டுவிட்டது. எமக்கேது குறை! எமது வளம் எவருக்கு உண்டு!— என்ற ஓர் தித்திப்பான எண்ணம் அந்நாட்டு மக்களிடம் மிகுதியாகிவிட்டது. வளம் மிகுந்திருந்ததால், வாழ்வுக்காகப் போராடித் தீரவேண்டிய நிலை இல்லாது போயிற்று. தேவையற்ற செயல்களிலே தம்மை ஈடுபடுத்திக்கொள்வதற்கும் நேரம் நிரம்பக் கிடைத்தது. அதன் பயனுக நாட்டுப் பாதுகாப்பு, பாசறைப் பாதுகாப்பு போன்றவைகளிலே நாட்டம் குறைந்து போய்

விட்டது. வளமிக்கது எமது நாடு எவர் வந்திடினும் தங்கிடலாம் என்று பேசிப்பேசி, வேற்று நாட்டவர் பலப்பலர் வந்திட இடம் கொடுத்ததன் பலனாக, நாடெங்கும் வேற்று நாட்டவரின் நடமாட்டம் அதிகமாகிவிட்டது. கொடுக்கக் கொடுக்கக் குறையாத செல்வம் எம்மிடம் உளது என்று பேசியதன் பலனாக வேற்று நாட்டவர் வேண்டுமட்டும் செல்வத்தைச் சேகரித்துச் சென்றிடும் நிலை ஏற்பட்டுவிட்டது. செல்வம் சுரண்டப்பட்டதுடன், கேடு நின்றுவிடவில்லை. வேற்று நாட்டவரின் கோட்டங்கள். கொத்தளங்கள் சதுக்கங்கள் அங்காடிகள் எழலாயின! அதனாலென்ன என்ற அக்கறையற்ற பேச்சிலே திருநாட்டவர் ஈடுபட ஈடுபட, வேற்று நாட்டவர் தமது பிடியைப் பலப்படுத்திக்கொள்ள வாய்ப்புக் கிடைத்துவிட்டது. இறுதி விளைவு? வேழம் புகுந்த வயலாகிவிட்டது திருநாடு! அன்னிய நாட்டின் பிடியிலே சிக்கிவிட்டது; அடிமைக் காடாகிவிட்டது. சிறு பொறியெனினும் பெரிய களஞ்சியத்தை எரித்தொழித்து விடுதல்போல, துளை சிறிதாகக் காணப்படினும் மரக்கலத்தினைக் கவிழ்த்திடுதல் போல, அழகு காண வந்தார்கள். பாராட்டிடப் போந்தனர், வாழ்த்திட வந்தனர், பிழைப்பு தேடிவந்தனர் என்று கூறி வேற்றவர் இடம்பெற விட்டதன் விளைவாக திருநாடு, வேட்டைக் காடாகி இறுதியில் அடிமை நாடாகிப் போயிற்று. ஆண்டு பலவற்றுக்குப்பிறகே, சீறிப் போரிட்டு விடுதலை பெற முடிந்தது. அந்த விடுதலை விழா சீரோடும் சிறப்போடும் கொண்டாடப்பட்டதன் தொடர்பாகவே, வெற்றி வீரர்கட்கு விருதுகள் வழங்கப்பட்டன; விருதுபெற்ற எண்ணற்ற வீரர்களிலே, எளிதில் எவர் கவனத்தையும் ஈர்த்திட்ட மாவீரன், குணாளன், வீரக் கழல்பெற்றான், விழியை அவை முழுதும் ஓட விட்டான். தன்னை வாழ்த்தும் பெரியோர்கட்கு வணக்கம் கூறினான், வியந்து நின்றோர்க்குப் புன்னகையைப் பரிசளித்தான். மகிழ்ச்சி பெற்றான்! நாட்டைக் காத்த மாவீரன் என்ற நற்பெயர் பெற்றவன் பெருமிதம் கொள்ளத்தானே செய்வான். ஆம்! அவன் கண்கள் களிநடமிட்டன! ஆனால் ஒரு கணமே! மறு கணமோ, மகிழ்ச்சி மங்கிற்று! கவலை கப்பிக் கொண்டது! காரணம் என்ன! எல்லோரும் பார்க்கின்றனர், பாராட்டுகின்றனர்! வீரன், மாவீரன் என்று புகழாரம் சூட்டுகின்றனர்! ஆனால்...அவரை மட்டும் காணோம்!! எவருடைய பார்வையிலே தான் படவேண்டும், எவருடைய பாராட்டுதலைத் தான் பெற வேண்டும் என்று குணாளன் மிகுந்த ஆவலுடன் இருந்தானோ, அவர் மட்டும் அவையிலே இல்லை. அவர் இத்தகைய கோலாகல விழாக்களையும் கொலுமண்டபத்து நடவடிக்கைகளையும் விரும்பாதவர் என்பதனை அவன் அறிந்திருந்தான் என்ற போதிலும், நாட்டைக் காத்திட்ட நல்வீரர் விருது பெறும் நாள் என்பதற்காக, அத்தகைய விருது பெறுபவரில், தன் ஒரே மகளின் நாயகனாக ஆகப்போகிறவன் விருது பெறுவதைக் கண் குளிரக் காணவேண்டும் என்பதற்காக, அவைக்கு



வந்திருப்பார் என்று எண்ணிக்கொண்டான்! அவர் வந்திருப்பின், ஆரணங்கும் வருவாளன்றோ.

அப்பா! அதோ! அவர்!—என்று அவள் கூறிட, ஆமாம்! மகளே! அவனேதான்!—என்று அவர் கூற இருவரையும் கண்டு மகிழ்ந்திட எண்ணினான். அவர் இல்லை! அவளும் இல்லை! மற்றவர் உளர்! பலர் உளர்! ஒத்த வயதினர்! மெத்தவும் வேண்டிய நண்பர்கள்! அதோ வாள் வடித்துக் கொடுத்தவர்! சிலம்பம் கற்றுக் கொடுத்தவர்! போர் முறை கற்றுக் கொடுத்தவர். புலவர்! — எல்லோரும் இருக்கிறார்கள் — அவர் மட்டும் இல்லை! அவர் இல்லாததால் அவளும் இல்லை!! வேறு அழகு மயில்கள் பல!! பைங்கிளிகள் பலப்பல! ஆனால், அவன் இதயத்தில் இடம் பெற்றுவிட்ட இன்பவல்லி அங்கு இல்லை. எவளை எண்ணி எண்ணி, களத்திலே காற்றெனச் சுற்றிச் சுற்றி கடும்போரிட்டு, வெற்றி பெற்று வீடு திரும்பிட வேண்டும் விரைவினில் வேல்விழியாளுடன் சோலையிலே உலவி கதை கதையாய்ப் பேசவேண்டும் என்று துடிதுடித்தபடி இருந்தானோ, அந்த அழகுமங்கை மட்டும் இல்லை! விண்மீன்கள் கண் சிமிட்டுகின்றன! அந்தப் பால் நிலவு மட்டும் இல்லை!! எவரிடம் கூறுவான்! எதை எண்ணி மன ஆறுதல் அடைவான்!! யாழ் இருக்கிறது, நரம்பு மட்டும் இல்லை எனில், நாதம் ஏது!

பலருடைய விழி தன்னைத் தாக்கக் கண்ட குணாளன், தன் உண்மை நிலையைக் கண்டு பிடித்து விடுவார்களோ, கேலி பேசுவார்களோ என்று எண்ணி ஏக்கத்தை மறைத்துக் கொள்ளலானான். சிலர் குணாளன் நிலையை உணர்ந்து கொள்ளத் தவறவில்லை.

விருதுபெற்ற வீரர்கட்கும், விருதளித்த அரசகுமாரனுக்கும், நாட்டின் அடிமைத் தளை ஒடித்த பாதுகாவலர்க்கும் பெரியோர் நல்லுரை வழங்கினர். நாடு இனி எங்ஙனம் இருத்தல் வேண்டும்; மக்கள் எவ்வழி ஒழுகுதல் வேண்டும் என்பனபற்றி எடுத்தியம்பினர்.

அவ்வவர் தம் பிறப்புரிமை அவர் எய்திடுக!

அவரவர் தமது கடமையினைச் செய்திடுக!

வில்லேருழவர்காள்! சொல்லேருழவர்காள்! நெல்லேருழவர்காள்! நீவிர் எல்லோரும் சேர்ந்ததே நாடு!

இவர் பொல்லார்! இவர் இல்லார்! அவர் புல்லார்! என்று கூறிடுவீர்! தவறு! கல்லார் இவ்விதமாக வெல்லாம் ஆகின்றார்—ஆகவே கற்க கசடற! கற்பவை கற்றபின் நிற்க அதற்குத் தக!

ஏதேதோ செப்புகின்றார்; இவன் செவியோ எதனையும் ஏற்கவில்லை. அவர் கூறும் சொற்களிலே பொருள் உண்டு மிகுதியாக; அறிந்தவனே! எனினும், அவன் மனதில் அவள் நிறைந்து நிற்கின்றாள், வேறெதையும் அவன் கொள்ள இயலவில்லை.

எதற்கும் ஓர் நேரம், அளவு, முறை வேண்டாமோ! இவர் கூறும் நல்லுரை, புதுமையோ! கூறுதற்கு வேறு வேளையும்வாராதோ! எல்லாமே இப்போதே இங்கேயே

கூறிடத்தான் வேண்டுமோ!—என்று தனக்குள் கூறிக் கொள்கிறான். அவன் மனதை அறிந்தவர்போல், அவை நின்று அறிவுரை கூறிய பெரியோரும், தமது உரையை நீட்டி முழக்காமல், குறளாக்கிக்கொள்கின்றனர்; குறுளன் செல்கின்றான், குயிலியைக் கண்பதற்கு. குறுளன் மட்டுமோ! இல்லை! இல்லை! வீரர் பலரும் விரைகின்றனர் இல்லம் நோக்கி!! இல்லங்களா, அவை!! இல்லை! இல்லை! அழகோவியங்கள்! மங்களம் பொங்கிடும்மாடங்கள்! எங்கும் புன்னகை, இன்னிசை! தங்கநிகர் தகத்தகாதாயம்!! முதியோர்களிடம் ஓர் முடுக்கு! இளைஞர்களிடம் ஓர் கெம்பீரம்! வளை ஒலி கரத்தினர், வாளொலிவீரர்களைப் போருக்கழைத்திடுகின்றனரோ! களமல்ல இது, கண்ணாளா! இது காதற் சோலை! இங்கு கீதம்வேண்டும் முரசு அல்ல!

—என்று கேலி பேசிட எண்ணிடும் கிள்ளை மொழியினர், காதலனைக் கண்டதும் கன்னம் சிவந்திடவே, எண்ணியதத்தனையும் மறந்து ‘அவர்’ ‘அவர்’ எனும் சொல்லை மட்டுமே இசைத்தபடி உள்ளனர்.

காரினம் மழையைக் கரவாதருள்க! பசிப்பிணி, றுமை, பகைமை நீங்கி, வளர்க அரசியல், வளர்க அறநெறி!—என்று பெரியோர் வாழ்த்துகின்றனர்! பிரிந்தவர் கூடினோம், பிரியோம் இனி நாம்! கூடெனநின்றேன், கொடுத்தீர் இன்னுயிர்; கொண்டு சென்றிடுமின், மற்றோர்போர் எனில்! என்று கொஞ்சுகின்றனர் மடவார்!

போர் எதற்கு? பொற் கொடியே! வெட்டி வீழ்த்துதற்கோ! குருதி கொட்டுதற்கோ! இல்லை! இல்லை! உரிமை நிலைநாட்டிட! புனலிடை மூழ்கி, பொழிலிடை உலவி, பொன்னார் இழையும் துகிலும் பூண்டு, கனிமொழி மாதருடன் இல்லறம் நடத்திட நமக்குள்ள உரிமையை எவரும் அழித்திடாதபடி பார்த்துக் கொள்ள! அன்னப் பெடையே! கன்னல் மொழியே! இன்பப் பெருக்கே!; பொழிலிடைப் புலியது புகுந்திடின் பூங்காற்று பெற்றிட இயலுமோ! புற்றிலுள அரவத்தினை அடித்தொழித்திடாமுன்னம், அந்திவேளையில், அழகு நிலவு வருவதனைக் காண்போம் வாவென உனை அழைத்து ஏக முடியுமா! தாமரைப் பூத்த குளமதிலே, முதலை புகுந்திடின் என் செய்வோம்! அது போன்றே, நமது நாட்டின் உரிமை அழித்திட உளுத்தர் துணிந்தது கண்டு, ஆர்த்தெழுந்து போராடி, அடிமைத்தளை அறுத்திடாவிடில், அன்பே! இல்லறம் ஏது! இன்பம் ஏது! இசை ஏது! கூத்து ஏது! புலவர் ஏது! தமிழ் ஏது! வாழ்வே பறிபோகுமே! வண்ணக்

கிளியே இதனை எண்ணியன்றோ, களம் சென்றேன்!—என்றெல்லாம் செந்தேனைப் பெய்கின்றான். காதற்களத்தினிலேயும் வல்லவன் என்பதனை மெய்ப்பிக்க!!

"அப்பா! அவருக்கு விருது தரப்போகிறார்களாம்," என்று அவள் கூச்சத்தைவிட்டுச் சொல்லாமலில்லை. ஆனால் அவருடைய செவியில் அந்தப் பேச்சு விழுந்ததாகத் தெரியவில்லை. அவர் ஏதோ பச்சிலையின் சாறு பிழிந்து வட்டிலில் சேர்த்துக் கொண்டிருந்தார் அவள் கண்ணீரை அடக்கிக் கொண்டு பேசலானாள்.

"நமது நாட்டைப் பற்றியும் நமது நாட்டு வீரர்களைப் பற்றியும் நாம், மிகத் தாழ்வாகப் பேசிக் கொண்டிருந்தோமே, அப்பா! இப்போது பார்த்தாயா! நமது நாட்டு வீரர்களின் ஆற்றலை! வெற்றி முரசு கொட்டுகின்றனர்!! எதிரியை விரட்டி அடித்து ஓட்டிவிட்டனர்..." அவள் எழுச்சியுடன் பேசுகிறாள், முதியவர் கேலிப் புன்னகை புரிகிறார்!

"மகளே! நேருக்கு நேர் நின்று போரிடும் பகைவனை நமது வல்லமையாலும் படைக்கலத்தின் கூர்மையாலும் வீழ்த்துவதும், விரட்டி அடிப்பதும், பெரிய அதிசயமல்ல! பகைவன், மறைந்து இருக்கிறான் என்று வைத்துக்கொள்! அந்த நிலையில், அவனைக் கண்டு பிடித்து வீழ்த்துவது என்றால் அது பாராட்டப்படத்தக்கது."—முதியவர் கூறுகிறார்.

"ஏன்! அப்படியும் நமது வீரர் செய்திருக்கிறார்களே! அவ்விதமான வெற்றி பெற்றதற்காகத் தானப்பா, அவருக்கு 'அஞ்சாநெஞ்சன்' என்ற பட்டமும் விருதும் தருகிறார்கள், ஒரு குகைக்குள்ளே எதிரிகள் பாசறை அமைத்துக் கொண்டார்களாம். நமது படையைத் திடுமெனத்தாக்க. அவர்தான் கண்டுபிடித்து, கடும் போரிட்டு, எதிரியின் 'பாசறையை அழித்தாராம்'' என்று தழதழத்த குரலிற் கூறுகிறாள் தையல்!

"அப்படியா! அப்படியா!"—என்று கேட்கிறார் முதியவர், பேச்சிலே ஆர்வத்தைக் காணோம். "இதோ இந்தப் பச்சிலை, இலேசிலா என் கண்ணில் தட்டுப்பட்டது! உனக்குத் தெரியுமா அம்மா! 'மூன்று பள்ளம்' என்ற காட்டுப்பகுதி! தெரிந்திருக்காது! உனக்குத்தான் முந்திரித் தோப்பே தெரியாதே. தாமரைக் குளத்தோடு, சரி, இந்தப் பச்சிலை, மூன்று பள்ளத்தைத்தாண்டி ஒரு காததூரம் சென்று கண்டுபிடித்துப் பறித்துவந்தேன். மலைப்பாம்புகள் நிறைந்த இடமம்மா! ஆனால் அவை, பாவம்! மனிதப் பாம்புகளைப்போன்றவை அல்ல! பசித்தால் புசிக்கும்! வேறு பாவம் செய்வதில்லை......

முதியவரின் பேச்சு அவளுக்கு சலிப்பை மூட்டுவதிலே வியப்பென்ன.........

ஓசைப்படாமல் எழுந்து உட்பக்கம் சென்று விடுகிறாள்.

சிறிது நேரத்திற்குப் பிறகுதான் முதியவர் தன் மகள் அங்கு இல்லாததைத் தெரிந்துகொள்கிறார். வாய்விட்டுச் சிரிக்கிறார் மெல்லிய ஒலியுடன்.

"கோபம், பாவம்! இருக்கும், இருக்கும்! காதலனை வியந்துபேசுகிறாள் அவள், ஆர்வமிகுதியால்! நானோ! இது காய்ந்து போவதற்குள் சாறு பிழிந்தெடுத்தாக வேண்டுமே என்பதிலே ஈடுபட்டு இருக்கிறேன். அவளுடன் சேர்ந்து நானும் அவன் புகழ்பாடவேண்டும் என்று எதிர்பார்க்கிறாள்! அஞ்சாநெஞ்சன்! அஞ்சாநெஞ்சன்! அப்படி ஒரு சிறப்புப் பட்டமாம், எதற்கு அஞ்சாத நெஞ்சம்? எதிரிக்கு! போருக்கு! களத்துக்கு! ஆபத்துக்கு!—பலப்பல அர்த்தம் சொல்லுவார்கள். அதிலும் நம்முடைய புலவர்களைக் கேட்டால், அந்தாதியாகப் பொழிந்து தள்ளுவார்கள்! அவன், அஞ்சாநெஞ்சன்! என் மருமகன்!......நான்......என் நெஞ்சம்......? அஞ்சுகிறேன்! மிகமிக அஞ்சுகிறேன்! என்ன ஆகுமோ, என்ன ஆபத்து பெருகிவருமோ என்று அஞ்சுகிறேன், அவன் அஞ்சாநெஞ்சன்! கரத்திலே வாள்! கருத்திலே வீரம்!! ஆமாம்! எப்படித்தான் பேசுகிறார்கள். போர் வீரர்கள்! நான்...நானு! இதோ...இந்தக்கலயம்...இந்தப் பச்சிலை,.....

அவனுடைய எதிரிகள் கரிமீதும் பரிமீதும் வருகின்றனராம்! நேருக்கு நேர் சந்திக்கிறான்! நான் போரிடுவது எந்த எதிரிகளிடம்...! அதுதானே விந்தை—அந்த எதிரிகள் எதிரில் இல்லை! நம்முடன் இருக்கிறார்கள்; நமக்குள் இருக்கிறார்கள். நான் அந்த எதிரிகளைத் தேடித் தேடி அலைகிறேன். காலையிலே கூடக் கேட்டார்கள் என்னைப்பார்த்து......பெரியவரே! விழாவுக்குப் போகவில்லையா என்று,,,விழாவாம்! வெற்றி விழாவாம்! அவர்களுக்கு......எனக்கு......? வேலை! வேலை! வேலை முடியவில்லை. வேலை முடிந்தால்தானே வெற்றியா தோல்வியா என்பதாவது புரியும்......

போர்வெறி கூடாது. அழிவு வேலையிலே ஈடுபடலாகுமோ, தீயிடலும் வெட்டி வீழ்த்துவதும் கொடுஞ்செயலல்லவோ! போரிட்டுத்தானோ பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ள முயலவேண்டும். அறிவின் துணை கொண்டு, அறவழி கண்டு, அன்புநெறி நின்று கருத்துவேற்றுமைகளைப் போக்கிக்கொள்ள இயலாதோ—என்றெல்லாம் முதியவர் எண்ணுவதுண்டு—ஆனால் உரிமை என்றும் கடமை என்றும் உரத்த குரலிலே முழக்கிடுவாருக்கு இடையில் நின்று இதுபோலப் பேசுதல் பயனளிக்காது என்பதனை உணர்ந்திருந்ததால், தாம் கூற நினைத்தவற்றை உள்ளத்திலேயே உறங்க விட்டுவைத்தார்.

எழுந்தது சேனை
எட்டுத்திக்கும் அதிர்ந்தன முரசம்
எங்கும் தூளி! எங்கும் குருதி!
வீரம் வென்றது
தீரம் வென்றது

என்று இளைஞர்கள் மட்டுமல்ல களம்பல கண்ட பெரியோர்களும் எழுச்சியுடன் பேசிடும் நிலையில், போர் அழிவுதானே தந்திடும்! போரிடுவதற்குச் செலவிடும் நேரம் உழைப்பு ஆகியவற்றினை, பொருள் செய்திடப் பயன்படுத்திடின் வறுமை ஒழியுமே, வாட்டம் தொலையுமே, வாழ்வு சிறந்திடுமே என்றெல்லாம் பேச முற்படுவது பேய்க்காற்று வீசிடும் வேளையில் குழலூத முனைவதற்கு ஒப்பாகும் என்று முதியவர் அறிந்திருந்தார். ஆகவே, இப்போதைக்கு வாளாயிருப்போம் என்றிருந்தார்,

வீடுகள் வீரக்கோட்டங்களாகிவிட்டன! நாடு போர்க்கோலம் பூண்டுவிட்டது! இந்நிலையில் அமைதி என்றும் அறம் என்றும் பேசிடின் எவர் செவிபுகும் என்று எண்ணினார். ஆயினும், விவரமறியாது; பகைவர் எங்குளார் என்பது புரியாது போரிடுகின்றனரே; போரிடவேண்டியது பசியுடன் பிணியுடன், வறுமையுடன்! வாளும் வேலும் என்ன செய்திடும் அந்தப்

போரில்! இதோ என் கலயம், பச்சிலை, இடித்தெடுக்கும் பொடி இவையன்றோ உண்மையான போர்க்கருவிகள் என்று கருதினர். ஆனல் தன் அருமைத் திருக்குமாரியேகூட, தன் பேச்சை ஏற்கமாட்டா நிலையிலிருப்பதனை அறிந்திருந்தார். சொல்வானேன்! செய்து காட்டுவோம்! என்ற முடிவுக்கு வந்தார்; செயலில் ஈடுபட்டார்.

அவர் ஓர் மருத்துவர்; அறிவானந்தர் என்ற அருமை மிகு பெயரினைப் பெற்றவர்; பெற்ரோர் வைத்த பெயர் வேறு; வேலழகன்! போராற்றலையும் அவர் இளமைப் பருவத்தே கற்றிருந்தார்; களம்பலவும் சென்ருர்; வெற்றியும் பெற்ருர். எனினும், இது வெற்றி ஆகாது; இது அல்ல நாம் நடத்தவேண்டிய போர்; மக்களுக்கு வாழ்வு பெற்றளிக்கும் சீரிய செயலிலேயே ஈடுபட வேண்டும் என்று உணர்ந்தார்; ஏடு பல படித்தறிந்தார்; எங்கெங்கு அறிஞர்கள் இருந்தனரோ அவர்களை யெல்லாம் நட்பு கொண்டார்; மருத்துவத் துறையிலே அவர் மனம் ஈடுபட்டது, மருத்துவத் துறையிலே மாமன்னர் மெச்சத்தக்க புகழும், மாநிதியும் ஈட்டியவர்களின் வரிசையிலே அவர் தம்மைச் சேர்த்துக் கொள்ளவில்லை — நலிந் தோருக்கு நண்பரானர். குப்பங்களிலே, குடிசைகளிலே குமுறிக் கிடப்போருக்குத் தோழரானர். எளியோரின் மருத்துவரானர்.

அறிவானந்தரின் போக்கு அலாதியானது. அவருடைய அண்ணன் கடல் வாணிபம் நடாத்தித் திரட்டிய சொத்துகூடக் கரைந்துகொண்டு வருகிறது; இவரோ அதுபற்றியும் கவலைகொள்ளக் காணும். காடு பல சுற்றுகிருர்; கூட இலைகளைப் பறிக்கிருர்; மாமருந்து தயாரிப்பதாகக் கூறுகிருர். மகளோ, [illegible] மங்கை! பொற்பாவை! அவளுடைய திருமணம் பற்றிய நினைப்பும் காணும். [illegible] குளைகப போகருன் குளன் என்று ஊர் பேசுகிறது. கேட்டால் இவர் இதழோரத்துப் புன்னகையை மட்டுமே பதிலாகத் தருகிருர்— என்று மாளிகையுள்ளோர், பரிவும் பச்சாதாபமும் கலந்த குரலிற கூறவந்தனர்.

போரிடும் ஆற்றலில் மட்டுமின்றி, பொருள் ஈட்டும் திறமையிலும் வல்லவர் என்பதனைச் சில ஆண்டுகள்—அறிவானந்தர் ஆகு முனபு—வேலழகனுக இருந்தபோது மெய்ப்பித்துக் காட்டியதனல், அவருடைய போக்கினை, திறமைக் குறைவு என்று கூறிட எவர் மனமும் இடந் தரவில்லை. அப்படி ஒரு போக்கு! என்பாரும், நமக்குப் புரியவில்லை என நவில்வாரும், பார்க்கப் போனல் மருத்துவத்துறைதான் மாண்புள்ள துறை என்று பாராட்டிப்பேசுவாரும் அவரவர் நிலைக்கும் நினைப்புக்கும் ஏற்றபடி பேசலாயினர். அறிவானந்தர் தமது போக்குபற்றி எவரிடமும் வாதாடுவதில்லை, மருத்துவர் என்ற முறையில், அவர் 'வாதம்' என்பதே பொல்லாத நோய் என்பதனை அறியாமலிருந்திருக்க முடியுமா!

பெரியவர், இவ்விதம் முணுமுணுத்துக்கொண்டிருந்தார். திடீரென ஒரு அலறல் கேட்டது. திடுக்கிட்டுப்போனர். "அப்பா! ஐயோ!" என்று தன் மகள் அலறிக் கூவிடும் சத்தம் கேட்டது.

(வளரும்)

திருமதி சாஸ்திரி:- இந்தியாவில் இப்போது மொழிப் பிரச்னை. மிகமுக்கியமான ஒன்றுகக் காணப்படுகிறது. நாங்கள்கூட, கனடாவில் இதேபோல, கியூபெக் பகுதியைச் சேர்ந்த பிரஞ்சு மொழி பேசப்படும் மக்களால், பிரஞ்சு மொழியும் ஆட்சிமொழியாக ஏற்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையைக் கொண்டிருக்கக் கண்டிருக்கிருேம். பெடரல் அரசு இக் கோரிக்கையையும் ஏற்றுக்கொண்டது. அங்கு இரண்டே மொழிகள் மட்டும்தான் இருக்கின்றன. ஆனல். இங்கு பதினன்கு தேசிய மொழிகளும் அந்த அந்தஸ்தைப் பெறாத இன்னும் பல மொழிகளும் இருக்கின்றன, ஆகவே, மொழி தொடர்பான இந்தியாவின் இந்த விவகாரத்தில் தங்கள் நிலை என்ன?

அண்ணா:- இந்தியாவின் மொழிப் பிரச்னை, கனடாவின் மொழிப் பிரச்னையைப் போன்றதுதான். இந்தியாவில் பதினன்குக்கு மேற்பட்ட மொழிகள்; ஆனல் அங்கு இரண்டுதான். அதனல் இந்த விவகாரம் கனடா விவகாரத்தைப் போன்றதுதானே யொழிய, முற்றிலும் அதனை ஒத்தது அல்ல.

ஏனென்ருல், இப்போது ராஜஸ்தானி மொழியினர், கூட, அம்மொழியையும் தேசிய மொழியாக ஏற்கவேண்டும் எனக் கேட்கக் கூடும்.

பதினன்கு தேசிய மொழிகள் என்பது மட்டுமல்ல; பதினன்கு வேறுபட்ட வரலாற்றுப் பின்னணிகள் என்றுகூட சொல்வேன்.

வரலாற்றுப் பின்னணிகளும் பரம்பரைப்பாரம்பரியங்களும்,கலாசாரமாறுபாடுகளும் கொண்டவைகளாகும் அவை.

எனவே கனடாவின் விவகாரத்திலிருந்து இந்திய மொழி விவகாரம் மிகவும் சிக்கல் நிறைந்ததாக இருக்கிறது.

கனடா, இருமொழிச் சிக்கல் சிரமத்துக்கு ஆளாக நேர்ந்தபோது, ஒரு உயர்மட்டக் குழுவை நியமித்து, அதன் பரிந்துரைகளின் பேரில், ஆங்கிலத்துடன், பிரஞ்சு மொழியையும் ஆட்சி மொழியாகப் பிரகடனம் செய்துவிட்டது.

ஆனல், இந்திய அரசாங்கம் இந்த விவகாரத்தில் தீவிர எச்சரிக்கைகொண்டு செயல்படவேண்டும்.

எனவேதான் மத்திய அரசாங்கத்துக்கு இந்த நிலைமையிலிருந்து விடுபடும் ஒருயோசனையாக, ஆங்கிலமே ஆட்சிமொழியாகத் தொடர்ந்து இருக்கவும், பதினன்கு மொழிகளுக்கிடையேயும், எது தொடர்புமொழியாக இருக்கவேண்டுமென்ற விவகாரத்தை எதிர்காலத் தீர்வுக்கு விட்டுவிடும்படியாகவும் கூறி இருக்கிருேம். துரதிருஷ்டவசமாக இந்தி இந்தியாவின் பெரும்பான்மை மக்களால், துணைக்கண்டம் முற்றிலுமாகப் பேசப்படவில்லை. அது இந்தியாவின் சில பகுதிகளில் மட்டுமே பேசப்படுகிறது.

கியூபெக்கில் பிரஞ்சு பேசுவோரின் பெரும்பான்மைபோல, தமிழ் நாட்டில், 90-சதவித மக்கள் தமிழையே பேசுபவர்களாக இருக்கிருர்கள்.

ஆகையால்தான் நாங்கள் பதினன்கு மொழிகளும் தேசிய மொழிகளாகவும், இவற்றுள் ஏதேனும் ஒரு மொழி, எந்த ஒரு அதிகார வர்க்கத்தின் நெருக்கடி அல்லது துணைகொண்டு அல்லாமல் —இயற்கையாக வளர்ந்து பதினன்கு மொழிகளுக்கிடையேயும் ஒரு தொடர்பு மொழியாக ஆகிறதோ, அதுவரையில் ஆங்கிலமே ஆட்சிமொழியாக இருக்கவும் பிரகடனப்படுத்தவேண்டுமென யோசனை சொல்கிருேம்.

ஆனல், மத்திய அரசினர் அதை ஒப்ப மறுக்கின்றனர். இதுதான் இந்தியாவின் மொழிச் சிக்கல்; இதனல்தான் இது, கனடா விவகாரத்தைவிட மிகவும் சிக்கலானதாக இருக்கிறது.

கனடா நாட்டு மிக்கில் பல்கலைக் கழக பேராசிரியர் திரு. டாக்டர் சாஸ்திரி அவர்களது துணைவியார் திருமதி சாஸ்திரி அவர்களுக்கு முதலமைச்சர் அண்ணா அவர்கள் அண்மையில் அளித்த ஒரு பேட்டி இது.

திருமதி சாஸ்திரி:- அதிக விளைச்சல் தரக்கூடிய நெல் விதைகளை அறிமுகம் செய்திருப்பதன் மூலம், நீங்கள் தமிழகத்தை ஒரு உபரிமாநிலமாக ஆக்கி இருக்கிறீர்கள். அதனல், இந்தியா, பிற நாடுகளிடமிருந்து உணவு உதவி கோருவதை மாற்றும் ஒரு நிலையை என்றேனும் ஒரு நாள் தோற்றுவிப்பீர்களா?

இந்த உபரி நிலைமையானது: ஒரு பிரதிகூல நிலைமையைக்கூட சமாளித்துக்கொள்ளும் என்று நீங்கள் கருதுகிறீர்களா?

அண்ணா:- விவசாய முனையிலிருந்து நாங்கள் பெற்றிருக்கிற இந்த வெற்றியானது, எதிர்காலத்துக்கான அந்த நம்பிக்கையைத் தோற்றுவித்துள்ளது. இந்த அதிக விளைச்சல் தரக்கூடிய விதைகளுக்கான ஒரு நிலையை நீங்கள் உணரவேண்டும்; இவ்வகை உற்பத்திக்கு அதிகமான உரவகைகள் வேண்டும்; ஆனல் நாங்கள் மிகவும் குறைந்த அளவே வழங்கப்படுகிருேம். போதிய அளவுக்கு உரவகைகள் வழங்கப்படுமானல், நிச்சயம் நாங்கள் இதில் முன்னேற்றம் காண்போம். இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளிலேயே இம்மாநிலம் உண்மையிலேயே ஒரு உபரி மாநிலமாகவே ஆகக்கூடும். அத்துடன், உணவுத்துறையில் இந்த நாட்டையே ஒரு ஏற்றுமதி நாடாக ஆக்கிக் காட்டமுடியும் என்றும் நாங்கள் நினைக்கிருேம்,

இயற்கையின்மீது பழி சுமத்தப்படும் போக்குகளை, நாங்கள்

குழாய்ப் பாசனங்களைப் பெருக்கிக் காட்டுவதன்மூலம் மாற்றிக்காட்டுவோம், இந்நாடு எல்லாவகை செழிப்பும், வசதிகளும்கொண்டது உண்மையில் இந்தியாவை விவசாயப் பொருட்களை ஏற்றுமதி செய்யும் நாடாகவே ஆக்கிக் காட்டமுடியும், இந்தியா இயற்கையிலேயே ஒரு விவசாய நாடாகும். நாம் அதிலே கருத்துச் செலுத்தவேண்டும்; அவ்வளவுதான்!

திருமதி சாஸ்திரி:- இந்தியத் துணைக்கண்டத்திலேயே முதலாவதாக நீங்கள் 'சீரணி' என்ற பெயரில் ஒரு சமூக சேவை இயக்கத்தைத் தோற்றுவித்திருக்கிறீர்கள். இஸ்ரேல் நாட்டில், இத்தகைய சமூக சேவை நிலையங்கள் வியக்கத்தக்க சேவைகளைச் செய்திருக்கின்றன, எதிர்காலத்தில் சீரணிப்படையின் சேவை எப்படிப்பட்டதாயிருக்க வேண்டுமென நீங்கள் திட்டம் வைத்திருக்கிறீர்கள்?

அண்ணா:- ஒரு நாட்டின் மறுவாழ்வுக்காக, மக்கள் முற்றிலும் அரசாங்கத்தையே நம்பிக்கொண்டிராமல், மக்கள் தங்களுக்குள்ளாகவே செயல்படவேண்டுமென்ற அடிப்படையைக் கொண்டதுதான் இத்திட்டம். அரசாங்கத் தொடர்பற்ற இதுபோன்ற நிறுவனங்கள் மிக நல்ல முறையில் சேவைசெய்ய முடியும். சேவை மனப்பான்மை ஒவ்வொருவருக்கும் இயற்கையிலேயே இருக்கிறது. இத்தகைய மன எழுச்சிகளை நாம், ஒரு நல்ல முறையில், ஒரு நிறுவன ரீதியில் திரட்டிக்கொண்டால், அந்த மக்கள்மூலம், தேசத்தின் புதிய வாழ்வுக்கான சேவைகளை எளிதில் பெறமுடியும் இதே எண்ணத்தில்தான் சீரணிப்படை நிறுவப் பெற்றிருக்கிறது. இது முற்றிலும் ஒரு பொது நிறுவனமே அல்லாமல் எவ்வித அரசியல் அல்லது கட்சிக்காரியம்கொண்டது அல்ல, இதுவரையில் இப்படையினர், மிக நல்ல சில செயல்களைச் செய்திருக்கிறார்கள், ஜெயப்பிரகாச நாராயண் அவர்களது பாராட்டைக்கூட அவர்கள் பெற்றிருக்கின்றனர். நாளுக்கு நாள் சீரணிப்படைக்குப் புதிய புதிய தொண்டர்களை நான் பெற்று வருகிறேன். அடுத்த 5-ஆண்டுகளில் அவர்கள் சிறப்பாக நாட்டுப்புற பகுதிகளில் நல்லபல செயல் திட்டங்களை முடிப்பார்கள். குளங்களை, பாதைகளை, பள்ளிகளைப் பாதுகாப்பதிலும், நமது ஒற்றுமையைக் கட்டிக் காப்பதிலும் அவர்கள் சேவை சிறப்புற்று இருக்கும். நான் சீரணிப்படை தொடர்பாக நல்ல சீரிய நம்பிக்கைக் கொண்டிருக்கிறேன்.

திருமதி சாஸ்திரி:- கனடாவில் வாழ்கின்ற இந்திய மக்களுக்காக நீங்கள் என்ன கருத்து அறிவிக்க விரும்புகிறீர்கள்?

அண்ணா:- தூரத்திலுள்ள ஒரு நாட்டில் இருக்கிறீர்கள் நீங்கள். இந்தியக் கலாசாரத்துக்கும், இந்திய குடியுரிமைக்கும் நீங்கள், அந்த நாட்டில், அதிகாரச் சார்பற்ற தூதுவர்களாகவே இருந்துகொண்டிருப்பீர்கள். கனடாவுக்கும், இந்தியாவுக்கும் நல்ல உறவு வளர்க்கவேண்டும். கனடாவின் உதவி நமக்கு மிகமிகத் தேவைப்பட்டிருக்கிறது. நம் நாட்டின் பொருளாதாரப் புதுவாழ்வுக்கு, கனடாவும் சரியான—மிக நல்ல பங்கைச் செலுத்தி இருக்கிறது. சிறப்பாக குந்தா திட்டத்துக்கு நாம் கனடாவுக்கு நன்றி செலுத்துவதுடன், மேலும் பல உதவிகளையும் கனடாவிடமிருந்து எதிர்பார்க்கிறோம். ஆனால் நீங்கள் எங்கள் கைத்தறி ஆடைகளை கனடா மக்கள் பயன்படுத்துமாறு எடுத்துச் சொல்லவேண்டுகிறேன்.

திருமதி சாஸ்திரி: நிச்சயம் செய்வேன்!

அண்ணா:- எங்களது கைத்தறியாளர்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் தேவைகளைக் கொண்டிருக்கிறார்கள், கனடாவைப் போன்ற இரக்கமுடைய மக்களைக்கொண்ட நாடுகள், இந்த வகையில் எங்களுக்கு உதவிடவும், கைத்தறிகளை இறக்குமதி செய்துகொள்ளவும் முன்வர வேண்டும். நீங்கள் எங்களது கைத்தறி ஆடைக்கு விளம்பரம் தேடவேண்டிய அவசியமே இல்லை—காரணம் நீங்கள் தரித்துக்கொண்டிருக்கிற பட்டாடையே அதனைச் செய்யப் போதுமானது!

2-ம் பக்கத் தொடர்ச்சி

ரைக் காப்பாற்ற முடிந்திருக்கிறது, சில சமயம், விபத்துக்குப் பின் அவர்கள் தங்கள் உறவினருக்கு ஒரு பெருஞ்சுமையாக, பரிதவிக்கத்தக்க துயரம் மிக்க பாரமாக—ஆகிவிடுகிறார்கள். நிலைமை இப்படியிருந்தும், மரண விதத்தைக் குறைக்கக்கூடிய இரட்சகத் தொப்பியின் சிறப்பைப் பொதுமக்கள் கொஞ்சமாவது உணர்ந்ததாகத் தெரியவில்லை. எனினும் ஒரு நல்ல சூசகத்தை நாம் காணமுடிகிறது – மோட்டார் சைக்கிளில் செல்லுபவர்கள் இரட்சகத் தொப்பி யணிவது நல்லதென்று சென்னை போலீஸ் கமிஷனர் சமீபத்தில் கூறியுள்ளார். இது மகிழ்ச்சியளிக்கக் கூடியதாகும்.

தோழிப்பெண்ணை சினிமாவுக்கு அழைத்துச் செல்லும் இளைஞன், தான் தொப்பி யணிவது நாகரிகமல்லவென்று கருதுகிறான். அவனுடன் செல்லும் அந்தப் பெண்ணும் அதை விரும்புவதில்லை. ஆனால் நம் இளைஞர்களும் யுவதிகளும் ஒரு விஷயத்தைத் தெரிந்துகொள்ள வேண்டும். இரண்டாவது மகாயுத்தத்தில் போரிட்டுப் புகழ் பெற்ற மகாவீரர்களே முதல் முதலாய் இந்த இரட்சகத் தொப்பிகளை அணியத் தொடங்கினார்கள். ஆகவே, இந்தத் தொப்பி வீரர்களின் சின்னமாகுமே யொழிய நாகரிகக் குறைவாகாது. இளைஞர்கள் ஸ்கூட்டரிலோ மோட்டார் – சைக்கிளிலோ போகும்போதெல்லாம் இந்தத் தொப்பி அணியவேண்டுமென்று பொதுமக்களிடையே அபிப்பிராயம் உருவாகவேண்டும். அரசாங்கம் தன் சொந்த நன்மையை முன்னிட்டாவது அவர்கள் இரட்சகத்தொப்பி அணியவேண்டுமென்று கட்டாயப்படுத்த வேண்டியதும் அவசியமாகலாம். இரவில் யாராவது சைக்கிளில் போவதாயிருந்தால், அதில் விளக்கு இருக்க வேண்டுமென்று கட்டாயப்படுத்துவதில்லையா? அதைப்போலத்தான் இதுவும். மோட்டாரில் 'பிரேக்'குகள் நன்றாய் இயங்க வேண்டுமென்று அதன் சொந்தக்காரரைக் கட்டாயப்படுத்துவதில்லையா? அதைப்போலத்தான் இதுவும்.

சிறிது காலத்துக்கு முன் 'டைம்' சஞ்சிகையில் ஒரு கட்டுரை வெளிவந்தது. அதில் கூறப்பட்டுள்ள கருத்தை அப்படியே எதிரொலிப்பதைக் காட்டிலும் சிறந்த முறையில் இக்கட்டுரையை முடிக்க முடியாது. 'பிறந்த நாள் பரிசாக உங்கள் புதல்வனுக்கு நீங்கள் அளிக்கும் மோட்டார் சைக்கிள் பின்பு அவனுக்குப் பிறந்த நாளே இல்லாதபடி செய்துவிடக் கூடாது' என்கிறது அக்கட்டுரை.

காப்புத் தொப்பிகள் இந்த இராஜ்யத்தில் கட்டாயமாக்கப்படும் என்று சமீபத்தில் ஒரு செய்தி வெளிவந்திருக்கிறது. இது பெரிதும் வரவேற்கத்தக்கதாகும். —நன்றி: தினமணி.

இவையெல்லாம் இவ்வுலகச் செய்திகளே!

இரட்டைக் காளைக்கு விபத்து!

பனி படர்ந்த மலையின்மீதும் நெடிதுயர்ந்த கட்டிடங்களின்மீதும் மட்டுமே இதுவரை மோதிக்கொண்டு விபத்துக்குள்ளான விமானங்கள் இப்போது மிருகங்களின்மீதும் முட்டி, மோதி விபத்துக்காளாகி இருக்கிறது. பம்பாய் விமான நிலையத்திலிருந்து புறப்பட்டு நியூயார்க் நகரம் நோக்கிப் பயணம் தொடங்கிய ஒரு விமானம், விமான தளத்தின் ஓடும் பாதையிலேயே விபத்துக்காளானதாம். இரண்டு மாடுகளின்மீது முட்டிக்கொண்டு. இந்த மாடுகள் விமானத்தின் இஞ்சினிலேயே சிக்கிக்கொண்டனவாம்!! விமானம் பழுதடைந்தது! பயணிகள் பிழைத்து விட்டனர்!!

அரசியல் சட்டம் அழுகிறது!

மாராட்டிர மாநிலத்தில் மதுவிலக்கைத் தளர்த்த, மாநில காங்கிரஸ் தன் ஒப்புதலைத் தந்துவிட்டதாம்! கள்ளச்சாராயப் பெருக்கத்தையும், ஆரோக்கியத்தைக் கெடுக்கும் தீய தயாரிப்புக்களையும் தடுக்கத்தான் இந்த அனுமதியாம்! இந்தியத் துணைக்கண்டம் முழுவதும் முழு மதுவிலக்கு மேற்கொள்ளப்படவேண்டும் என்பது அரசியல் சட்டத்தின் வேண்டுகோள்! அரசியல் சாசனத்தைக் காட்டி—அதன் மதிப்பு—மகத்துவம் கெடுகிறது என்று பேசுவோரும் காங்கிரசுக்காரர்கள்தான்! அவர்களது ஆளுகையில்தான் மதுவிலக்கு—தளர்ச்சி என்ற முறையில் அரசியல் சட்ட மதிப்பு உயர்த்தப் படுகிறது! காங்கிரஸ்தான் சட்டம், ஒழுங்கு என்றும் பேசுகிறது என்பது விந்தையாயில்லையா?

இந்தியாவுக்கும் வேண்டும்!

இந்தியத் துணைக்கண்டத்துத் திருமண விழாக்கள் சீரோடும் சிறப்போடும் காட்டப்பட, அதன் செலவுப் பட்டியலை விரித்துக் காட்டுவதில்தான் இருக்கிறது என்று நினைக்கும் காலம் இது. ஆனால் பொருளாதாரச் சிக்கல் பற்றி இத்துறை கவலைப்படுவதே இல்லை. எந்த வகையாலும் மீட்கப்பட முடியாத செலவுகூட! உண்மையை உணர்ந்த இலங்கை அரசு, இந்த இன செலவினத்தைக் கட்டுப்படுத்தி வரையறை செய்ய ஒரு சட்டம் கொண்டுவரப் போகிறதாம்! இந்தியாவும், சிறப்பாகத் தமிழகமும் இதில் கொஞ்சம் கவனம் செலுத்தினால் என்ன?

எந்த ஊரோ! என்ன பேரோ!!

டெல்லி மாநிலத்திலுள்ள இஸ்லாமாபாத் என்ற நகருக்கு 17—ஆவது மைலில் புதிய நகரம் ஒன்று கண்டுபிடிக்கப் பட்டிருக்கிறதாம்! புதியது என்றால் புதிதாக உண்டாகிக் கொண்டிருக்கவில்லை. கால வெள்ளத்தில் புதையுண்டுபோன ஒரு நகரத்தைத்தான் தோண்டி—கண்டுபிடித்திருக்கிறார்கள். தெருக்கள், சந்துகள் வீட்டுக்கூறைகள், மட்பாண்டங்கள் முதலானவைகளின் அடையாளங்களும், பழங்கால கற்சுவர்களும் கூட இருக்கின்றதாம்! புதைந்துபோனது எந்த ஊரோ! என்ன பேரோ!!

பேசும் குழந்தை!

பேசியே வென்றுவிட்டார்கள் இந்த தீனா மூனா காணாக்கள் என்று சொல்லிச் சொல்லி அங்கலாய்த்துக்கொள்ளும் காங்கிரசுக்காரர்கள் இப்போது புதிய புதிய பேச்சாளர்களைத் தேடிக்கொண்டிருக்கிறார்களாம்! கிடைத்தவர்களில் ஒருவருக்கு 6–வயதாம்! திருச்சி நகரமாம்! பேசத் தொடங்கிவிட்ட அந்த குழந்தைக்குநம் பாராட்டுகளைப் படைக்கவேண்டாமோ!

தமிழே சரணம் ஐயப்பா!

தமிழக அரசு, அவசரக்கூட்டம் மூலம் இந்தியை தமிழகத்திலிருந்து ஒழித்துவிட்டது! முன்னரே எதிர்பார்த்ததுதான்! இந்தி ஆசிரியர்களுக்கு சில இடங்களில் மாற்றுப் பணிகளும்கூட கொடுக்கப்பட்டுவிட்டிருக்கிறது. சில பள்ளிகளில் இந்தி ஆசிரியர்கள், தமிழ்ப் பாடங்கள் நடத்தினார்களாம்! உண்மை! வெறும் புகழ்ச்சி இல்லை! இந்தி ஆசிரியர்கள் தமிழ்ப் பாடம் நடத்தி இருக்கிறார்கள்! வடபுலத்தில் அல்ல! தமிழ் நாட்டில்தான்! திருச்சி நகரில்தான்! சிலர் லைப்-ரெரியன் வேலைக்கும் மாற்றப்பட்டிருக்கிறார்கள்! தகுந்த மாற்று வேலைகள்தான் இது இல்லையா?

பெரிய அமைச்சரவை!

பீகார் படும்பாடு தறிபடுமோ, தாளம்படுமோ தெரியவில்லை!! அங்கிருந்த கூட்டணி அமைச்சரவையைக் கவிழ்த்துவிட்ட காங்கிரசுக்காரர்களுக்கு மானக்கேடான சம்பவங்கள் நாள்தோறும் நடைபெற்றுக் கொண்டே இருக்கின்றன. காங்கிரஸ் ஆதரவைப் பெற்ற சோஷித்தளக் கட்சியின் மொத்தம் 39 உறுப்பினர்களுக்கும் அமைச்சர் பதவியாம்! இன்னும் 15 பேர் வெளியேறி இக்கட்சியில் இணைந்து, அவர்களும் அமைச்சர்கள் ஆக இருக்கிறார்களாம்! ஜனநாயகம் அழுகிறயது! பீகார் மக்கள் சிரிக்கின்றனர்! வாக்காளர்கள் மட்டும் சிந்திக்கின்றனர்!

தொகுப்பு: ராஜிமணாளன்.

திருமதி சாஸ்திரி:- நான் ஒரு விஷயத்தைக் குறிப்பிட விரும்புகிறேன்—நீங்கள் வருத்தப்படக்கூடாது. நம் நாட்டு வணிகர்கள், வெளிநாட்டுத் தேவை விண்ணப்பங்களை, உடனுக்குடன் கவனித்து ஒழுங்காக குறிப்பிட்ட காலத்தில் அனுப்புவதில்லை. இது ஒன்றுதான் கனடாநாட்டு மக்களின் குற்றச்சாட்டாக இருக்கிறது. இதுகுறித்து நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?

அண்ணா:- நாங்கள் அவர்களை மாநில மட்டத்துக்கு ஒன்று திரட்டிக்கொண்டு, இருப்புக்களை ஒழுங்குபடுத்தி, நல்ல தரமானதாக இருக்கக் கவனம் எடுத்துக் கொண்டு, விண்ணப்பங்களை முடிந்த அளவு உடனுக்குடன் கவனிக்கவும் ஏற்பாடு செய்து கொள்ள முடியும். ஆனால், நாங்கள் வெளிமார்க்கெட் ஒன்றின் உத்திரவாதம் கிடைக்கப் பெற்றாலே இங்கு இப்படிச் செய்ய முடியும். இப்பொழுது அது ஒழுங்கற்ற—தெளிவில்லாத ஒரு நிலைதான். எந்தவகை வேண்டுகோள் வந்தன என்பதும் தெரியவில்லை. ஆனாலும், இது ஒழுங்குபடுத்தப் படவேண்டும் — கனடாவும் பெரிய அளவுக்கு இதில் உதவி செய்ய முன்வரவேண்டும்.

நன்றி!

புரிந்தால் சரிதான்!

—கஸ்தூரி நடராசன்—

அன்பே!

அழகுப் பெட்டகமே! ஆருயிர் சிட்டே! அன்பின் வடிவே — பண்பின் உறைவிடமே! பாலன்ன உன் உள்ளத்தில் எழும் பழமன்ன மொழிகளை, உன் பவழவாய் உதிர்க்கும் விதம்தான் என்னே! காற்றினும் கடுகிவந்தென்னை கட்டியணைத்துக் கொள். கற்பகத்தரு ஒன்றிற்குத்தான் கேட்டதையளிக்கும் சக்தி உண்டென்று சொன்னவர்களும் சொல்பவர்களும் உன்முகம் காணுத குருடர்கள். உன் முகத்தில் நிலவைக் காண்கிறேன். நீ நிண விளக்கு; உன் உள்ளத்து ஒளியால் என் இருண்ட இதயத்தில் இமயமன்ன இன்பத்தை வாரி வழங்கிடு — வளர்த்திடு மேலும் உன் அன்பை. மிதித்திடாதே என் எண்ணக் கோட்டைகளை. அளித்திடு இன்பம் என்று ஆயிரம்முறை கேட்டுக்கொள்ளவில்லை, கெஞ்சுகிறேன் உன்னை. நெஞ்சமுண்டே உனக்கு —நிகர் அதற்கு வேறேது இவ்வுலகில் எனக்கு — நெக்குறும் தன்மையும் உண்டே அதற்கு. பொல்லாங்குக்காரர்கள் போக்கிடம் அறியாதார், புழுங்கிய மனம்படைத்தோர் வேண்டுமானுல் உன்னையும் என்னையும் பிரித்திட யோசிப்பர். யாசிப்பர் உன்னிடம் என் பிரிவை. பாவை நீயோ பகலவனன்ன குணம் கொண்டு எரித்திடு அவர்தம் ஆணவப் போக்கை. வேண்டேன் வேறெதையும் உன்னையன்றி; விரும்பித் தந்திடு உன்னையே எனக்கே. வெறுப்பின்றி—சலிப்பின்றி வானளாவப் புகழ்ப் பெற்றவனும் வள்ளுவன் வகுத்த இல்லறமாம் நல்லறத்தை நல்லமுறையில் நடாத்திடுவோம். நானிலம் நம்மை பழித்திட ஏதொரு சந்தர்ப்பத்தையும் ஈந்திடாமல் இசைபட வாழ்வாங்கு வாழ்வோம். அன்பால் பாரி நீ; அருளால் ஓரி நீ; என் வாழ்வின் இருள் நீக்கிட வந்த ஒளி நீ. இதயத்தை இன்பத்தில் திளைத்திட வந்த தெவிட்டாத தீஞ்சுவைக் கனியே, இதயத்தைத் திறந்து காட்டிவிட்டேன்.

இப்படிக்கு,

கடிதம் எழுதியவரின் பெயரைத் தெரிந்துகொள்ளத்தடையாய் இருந்தது அந்தப் புத்தகம். அதுவும் சரிதான். பெயரைத் தெரிந்து நாமென்ன செய்யப்போகிறோம் என நினைத்துக் கடிதமெழுதியவரின் பெயரைப் படிக்காமல் விட்டுவிட்டேன்.

இதென்ன கடிதமா? கற்பனை ஊற்ற? சங்க காலத்துத் தலைவன் தலைவிக்கு எழுதிய ஓலை மடலா என்றெல்லாம் நினைத்தேன். பாம்பின் கால் பாம்பறியும் என்பார்கள்—ஒரு தொழிலாளியின் அவஸ்தை இன்னொரு தொழிலாளிக்குத்தான் தெரியும் — ஒரு ஏழையின் சொல் மற்ருெரு ஏழைக்குத் தான் புரியும்— சேலை இல்லையென்று சிற்றன்னை வீட்டுக்குப்புறப்பட்டாளாம் ஒருத்தி. சிற்றன்னையோ கிழிசல் ஆடையணிந்து அக்காள் மகளை வரவேற்றாளாம். அந்த கதையைப் போலல்லவா இருக்கிறது இது. நானே காதல் தோல்வி தழுவிய நிலையில் செய்வதறியாது திகைத்துக் கொண்டு செண்பகத்திடம் ஆறுதல் பெறலாம் என்று வந்தேன். ஆனால், செண்பகமோ அந்த சிற்றன்னையின் நிலையில் அல்லவா இருக்கின்றாள். இந்தக் கடிதத்தை மற்றவர்கள் படித்துவிடக்கூடும் என்ற எண்ணம் கொஞ்சம்கூட இல்லாமல் மேசைமீது விரித்த நிலையிலேயே வைத்துவிட்டுப் போய்விட்டாளே. விவேகமே இல்லையே என்று நினைத்துக்கொண்டிருந்த போதுதான் செண்பகம் சாப்பிட்டுவிட்டு கையைத் துடைத்துக்கொண்டு கலகலப்பாக உள்ளே நுழைந்தாள்.

என்ன சாந்தா, உன்னைப் பார்க்க வேண்டுமென்று தான் கொஞ்ச நாழிக்கு முன் துடித்தேன்......... நல்லவேளை நீயே வந்துவிட்டாய். அம்மா எப்படி? நலம்தானே? தம்பி செல்வன் சௌக்கியமா? சிரிப்பும் கலகலப்பும் கலந்தநிலையில் பேச்சை ஆரம்பித்தாள்.

எனக்கோ ஏது இவள் பலே கைகாரியாக இருப்பாள்போல் தெரிகிறது. நெஞ்சையுருக்கும் காதல் கடிதம் மேசைமீது. ஆனால், இவளின் பேச்சோ என் நெஞ்சத்தில் எந்தவித யோசனையையும் அவளைப் பற்றி உலவவிட மறுக்கிறது. அவளின் கலகலப்பான பேச்சு. எனக்கு வந்த கோபத்தில் சே...நீ என்ன மனச்சாட்சி உடைய பெண்தானா? என்று கேட்கத் தோன்றியது. இருந்தாலும் வேதனையை அடக்கிக் கொண்டு எல்லோரும் நலம்தான் என்று நாசுக்காக ஒரே வரியில் பேச்சை முடித்தேன்.

எங்கே இந்தப் பக்கமே வருவதில்லையே? என்ருள்.

இல்லை, எனக்கு வேலை என்றேன்

மறைக்காதே எனக்கு எல்லாம் தெரியும்...அவள் முடிக்காமலேயே நிறுத்தினுள்.

என்ன தெரியும் அவளுக்கு, என் மனம் இப்படி எண்ணியது. அவள் எப்போதுமே இப்படித்தான். தெரியாதவைகளையும் தெரிந்தவைகளைப் போலவே நடித்து எதிரியிடம் இருந்து உண்மைகளை வரவழைத்து விடுவாள். இருந்தாலும், என்ன தெரியும் உனக்கென்றேன்.

ஏதோ, எல்லாம் தெரியாவிட்டாலும் விஷயத்தின் மொத்தம் கோடிட்டது போலத் தெரியும். அவள் அப்போதும் முழுவதையும் விளக்கவில்லை.

சரி, எது எப்படியானுலும் ஆகட்டும்...விஷயத்திற்கு வா......ஆமா, இந்தக் கடிதத்தை இவ்வளவு கவனக் குறைவாக மேசை மீதே வைத்துவிட்டுப் போய் நிம்மதியா சாப்பிட்டுவர்றியே உனக்கு பயமே இல்லையா உன் அம்மாவிடம்? என்று சொல்லிவிட்டு நான், அவள் என்ன சொல்லப் போகிருள் என எதிர்பார்த்தேன்.

அந்தக் கடிதத்தைப் படித்தாயா? அவள் ஆற அமரக் கேட்டாள்.

மற்றவர்களின் கடிதத்தைப் படிக்கக் கூடாதுதான்; இருந்தாலும் கடிதத்தில் இருந்த வார்த்தைகள் என்னைக் கவர்ந்துவிட்டன. அதற்காகப் படித்தேன். மேலும், உனக்குச் சொல்லிக் கொள்ளலாம் என்ற தைரியம்தான்! இவைகளைச் சொல்லும்போது உண்மையிலேயே நான் வெட்கப்பட்டேன் என்பதுதான் பொருந்தும். நாம் ஏன் அவளின் கடிதத்தைப்படித்தோம் என நினைத்தேன். அவள் நாற்காலியில் சுகவாசிகள் ஓய்வெடுத்துக்கொள்ளும் பாணியில் உடல் தளர அமர்ந்து அனுவசியமாக என்னைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

அது சரி, சாந்தா இது நியாயமா என்று கடிதத்தைப் பார்த்துக் கொண்டே கேட்டேன்.

எது இந்த உலகத்தில் நியாயமாக நடக்கிறது இதை மட்டும் நியாயம் என்று ஒத்துக்கொள்ள? அவள் சற்று தைரியமாகவே சொன்னுள்.

பாவம் அவர் எவ்வளவு அன்பு வைத்திருக்கிருர் உன் மீது. அதற்காக...நான் முடிக்கவில்லை,

அதற்காக, உயிரைவிடச் சொன்னால் விட்டுவிட முடியுமா என்ன? என்று அவள் முடித்தாள்.

கலந்துவிட்ட மனம் பிரிவதென்பது, காலம் மன்னிக்காத ஒன்று என்றேன்.

காலம்......அது பொல்லாததாக மாறிவிட்டது சாந்தா இப்போது... பெண் அப்படிப் பார்க்கக்கூடாது; இப்படிப் பார்க்கக்கூடாது. வீதியிலே போய்க்கொண்டிருக்கும்போது ஆடவரிடம் வழிகூடக் கேட்கக்கூடாது. அப்படிக் கேட்டாலோ வந்தது வம்பு. உடனே...காதல்னு சொல்லுவாங்க ... கத்தரிக்காய்ன்னு பொறுமுவாங்க. நீ லைலா, நான் கயஸ்; நீ அம்பிகாபதி நான் அமராவதின்னு சொல்லிகிட்டு அலைவாங்க. இதற்கெல்லாம் நான் இடங்கொடுக்கத் தயாராய் இல்லை. அவள் பேசுவது எனக்கு விளங்கவில்லை. அவள் யார்? அவர் எந்தவிதத்தில் உனக்குத் தெரியும் எப்படி இந்த அளவுக்குப் பழக்கம் ஏற்பட்டது? நான் ஆவலோடு கேட்டேன்.

அவசியம் தெரிந்து கொள்ளத்தான் வேண்டுமா நீ? அவள் திடமாகக் கேட்டாள்,

ஆமாம், என்றேன் நானும்.

அவர் ஊர் திருநெல்வேலி, பெயர் அழகிரி. பெயருக்கேற்ற உருவம் என்று வைத்துக்கொள்ளேன். அவருக்கும் எனக்கும் பழக்கம் ஏற்பட்ட விதமே புதுமைதான். நான் சொல்லப்போவது யாருக்கும் தெரியாது. என் வீட்டில் ஒருநாள் நன்றாக உறங்கிக் கொண்டிருந்த சமயம். அந்த நடுநிசியில் காலடி சப்தம் கேட்டு விழித்துப் பார்த்த என் கண்களுக்கு இரண்டு உருவங்கள் ஒன்றை யொன்று கட்டிப் புரண்டு சண்டையிட்டதைக் கண்டேன். பயத்தால் நிறைந்துபோன இதயத்துடன் மெள்ள எழுந்து மின் விளக்கைப் போட்டேன். அப்போது, சண்டையிட்டுக் கொண்டிருந்த உருவங்களில் ஒன்று வெளிச்சம் கண்டதும் ஓடுவதைக் கண்டேன். மிஞ்சி நின்றிருந்த அந்த ஒரு உருவம் பயத்தால்மிரளவில்லை. ஆனால், ஆச்சர்யத்தால் அவரின் கண்கள் அகல விரிந்ததற்குக் காரணம், என் நிலை குலைந்த ஆடைதான் என்பதை அவர் என்னையே உற்றுப் பார்த்ததிலிருந்து அறிந்து கொண்டேன். அழகிரி. ஆமாம். நம் அடுத்த வீட்டில் குடி வந்த புதிய அதிகாரி அல்லவா என்ற எண்ணத்தில் இருந்தேன் அவரை என் அறையில் கண்டபோது. அவர் வந்த நாளிலிருந்தே அவர் மீது எனக்கொரு எண்ணம்தான். ஆனால் அவருக்கும் அதே வீட்டில் குடியிருந்த கோபாலின் மகள் கோகிலத்திற்கும் காதல் உறவை வளர்க்கும் பழக்கம் என நினைத்திருந்தேன் நான். அதை, அடுத்த வீட்டு அல்லியும் ஊர்ஜிதப்படுத்தினாள். ஆகவே, அவர்கள் காதலுக்குக் குறுக்கே நாம் ஏன் போகவேண்டும் என்ற எண்ணத்தில் நான் அவரிடம் ஒன்றும் பேசாமல், யாருக்கும் தெரியாமல் வாசல் வழிக் கதவைத் திறந்து வெளியே அனுப்பிவிட்டேன் அந்த நடு நிசியில். அன்றிலிருந்து அவரை நான் பார்ப்பேன்; அவர் என்னைப் பார்ப்பார். என் பார்வை அவருக்கு எதை விளக்கியதென்று எனக்குத் தெரியாது. ஒரு நாள் நான், கடைக்குப் போய்க்கொண்டிருக்கும்போது என் அருகில் வந்து கோபாலின் மகள் கோகிலத்திடம் தனக்கு தங்கைப் பாசமேயன்றி வேறொன்றுமில்லை' என்று என் சந்தேகத்திற்கு மருந்திட்டு தெளியவைப்பதுபோல சொன்னார். நான் அவரை ஒருநாளும் உங்களுக்கும், கோகிலத்திற்கும் என்ன உறவென்றோ? எந்த முறையில் பழகுகிறீர்கள் என்றோ கேட்டதில்லை. ஆனால் அவரே வந்து சொல்கிறார் என்பதை நினைத்தபோது, தன் நிலையை எனக்கு விளக்குகிறார். அதாவது, என்னை அவருக்குரியவளாக்கிக்கொள்ளக்கூடிய விதத்தையும் வழியையும் காட்டுகிறார் என்பதைத்தான் என்னால் அறிந்து கொள்ள முடிந்தது அப்போது. ஆனால், அவர் சொல்வதை நான் நம்புவதாக இல்லை. ஆண்களே இப்படித்தான் ஏமாற்றுக்காரர்கள் என்ற எண்ணத்தின் அடிப்படையில் "எனக்கு அதைப்பற்றி அக்கறை இல்லை" என்று 'வெட்டு ஒன்று துண்டு இரண்டாகச்சொல்லியனுப்பிவிட்டேன். என்னதான் நான் அவர்மீது பற்றுக்கொண்டாலும், எந்த முடிவையும் என்னால் எடுக்க முடியவில்லை. காரணம் கோகிலம்தான். இன்று கோகிலத்தை தங்கை என்பார். நாளை நல்லவள் என்பார், அதற்கடுத்த நாள், நாங்கள் என்ன உடன்பிறந்த அண்ணன் தங்கையா என்ன? என்று கேட்டுவிட்டுத் திருமண ஏற்பாடு செய்வார்.....ஆகவேதான் அவரை நம்ப மறுக்கின்ற வகையில் வெட்டிப் பேசியனுப்பிவிட்டேன். அதன் பிரதிபலிப்புதான் இந்தக் கடிதம்.

அவள் சொன்ன கதையைக் கேட்டு எனக்குத் தலை சுற்ற ஆரம்பித்தது. அப்போதுதான் என் தம்பி செல்வன் என்னிடம் வந்து செய்தித்தாளை நீட்டினான். அவன் விரல் காட்டிய இடத்தைப் படிக்க ஆரம்பித்தேன். ஆமாம். கோகிலாவும் கண்ணன் என்ற வாலிபனும் காதலர்களாம். கண்ணனை மணக்க கோகிலா ஊரைவிட்டே ஓடிவிட்டாளாம். அதையறிந்த கோகிலாவின் தந்தைபெண்ணை வரவழைக்க வெளியிட்ட விளம்பரம்தான் அது. 'கண்ணனையே உனக்கு கணவனாக்குகிறேன் உடனே புறப்பட்டுவா'! என்ற வார்த்தையைப் பார்த்த எனக்கு இந்த உலகமே உருண்டு என் தலை மீது விழுந்து விடுவதைப்போலத் தோன்றியது. செண்பகம் அமைதியாக முகத்தில் எந்த வித மாற்றமும் இல்லாமல் அமைதியின்றி அமர்ந்திருந்தாள். சொன்னது உன் கதையா? என் கதையா? என்றேன் என் நிலையைநானேசற்று சாமதானப் படுத்திக்கொண்டு.

சாமர்த்திய சாலியான அவளோ, புரிந்து கொண்டால் உன் கதை. இல்லையானால் என் கதை என்றுதான் வைத்துக்கொள்ளேன் என்றாள். மேசைமீதிருந்த தினசரி தாளைப் பார்த்தவாறே.

செண்பகம் உண்மையிலேயே உயர்ந்தவள்தான். அமைதியைத் தேடி அவளிடம் வந்தேன். அவளோ என் கதையை அவள் கதையாகச் சொல்லி உண்மையை உணர்த்தினாள்.

அடுத்த நாள் அழகிரியை நான் கண்டபோது வெட்கத்தால் தலை குனிந்து நின்றேன். "கடிதம் கிடைத்தது நன்றி என்றேன்" புரிந்தால் சரிதான் என்றார். ❋

உரைகல்:

தி. மு. க. சிறப்பு மலர்.

தொகுப்பாசிரியர்:
எஸ். வி. சக்கரைமைதீன்
வெளியீடு: சிந்தனையாளர் பாசறை.
தாராபுரம். விலை ரூ. 2—50

திராவிட முன்னேற்றக் கழகத்தின் வெற்றியைச் சிறப்பிக்கும் வகையில், தமிழகத்தில் பலதரப்பட்ட அறிஞர்களிடமிருந்தும் கட்டுரைகள் பெறப்பட்டு பிரசுரிக்கப்பட்டுள்ளது மலர். அமைச்சர்கள், சமூகப் பிரமுகர்கள் முதலான அனைவரது வாழ்த்துக்களும் அடங்கியது. பல கட்டுரைகள் மூலமாகவும் உள் நாட்டு, வெளிநாட்டு விவகாரங்களைக் கூட சிறப்பாக இந்த மலர் தெரிவிக்கிறது. அனைவரும் படித்துப் பயன் பெறலாம்.

ஒவ்வொரு ஆண்டும் ரூ. 6,250 கோடி மதிப்புள்ள 'பாக்' செய்யப்பட்ட பொருள்கள் விற்கவும் வாங்கவும் படுகின்றன

நம் நாட்டில் தகரம், பிளாஸ்டிக், அட்டைப்பெட்டிகள் அதிகரிக்காவிட்டால் அன்றாட உபயோகப் பொருட்கள் கிடைப்பதே அரிதாகிவிடும்.

வனஸ்பதி அல்லது பற்பசை வாங்கும்போது, நீங்கள் வனஸ்பதி டின்னையோ, பற்பசை ட்யூபையோ பற்றிச் சிந்திக்கமாட்டீர்கள், அது சகஜம். அந்த டின்னோ அல்லது ட்யூபோ இல்லாவிடில் வனஸ்பதியோ பற்பசையோ கிடைக்குமா? கிடைத்திருக்காது. நம் நாட்டின் ஒவ்வொரு மூலைகளிலும் உள்ள இடங்களுக்கு ஏராளமான அளவுகளிலும், பாதுகாப்பாகவும், கலப்படமில்லாமலும் இப்பொருட்களை அனுப்ப 'பாக்' செய்யும் வசதி இல்லாமல் முடியாது.

அன்றாட வாழ்வில் 'பாக்கேஜிங்' பணி சிறியதல்ல என்பது இதனால் விளங்கும். மேலும் அன்றாடத் தேவைப் பொருட்களின் உற்பத்தி பெருகப் பெருக பாக்கிங் சாதனங்களான டின்களும், பிளாஸ்டிக் ஜாடிகளும், அலுமினிய ட்யூபுகளும், அட்டைப் பெட்டிகளும் அதிகரிக்கவேண்டும்.

இவையெல்லாவற்றையும் மெட்டல் பாக்ஸ் நிறுவனத்தினர் தயாரிக்கின்றனர்; இந்தியா முழுவதும் உள்ள தங்கள் 9 நிறுவனங்கள் மூலமும் மெட்டல் பாக்ஸ் நிறுவனத்தினர் அன்றாட உபயோகப் பொருட்களுக்குத்தேவையான 'பாக்கிங்' வசதிகளை அளிக்கின்றனர். பொருட்களை விஞ்ஞான ரீதியில் சோதித்து; அவற்றுக்கேற்ற 'பாக்கிங்' முறைகளைச் சிபாரிசு செய்வது மெட்டல் பாக்ஸ் கம்பெனியார் அளிக்கும் வசதிகளில் ஒன்று. 'பாக்' செய்வதில் வெளிநாட்டு தொழில் அறிவும் துணை புரிகிறது.

அன்றாடத் தேவைப் பொருட்களின் உற்பத்தி அதிகரிக்க வேண்டுமானால் மற்ற வசதிகளுடன் சீர்திருத்தப்பட்ட சிறந்த 'பாக்கிங்' வசதிகளை தாராளமாக அளிக்கவேண்டும் என்பதே மெட்டல் பாக்ஸ் நிறுவனத்தின் குறிக்கோள். இந்த நம்பிக்கையே மெட்டல் பாக்ஸ் நிறுவனத்தின் வளர்ச்சிக்கு ஊக்கமளிக்கிறது.

MB

மெட்டல் பாக்ஸ்

பாதுகாப்பான பாக்கிங்

MB/4102

வலியா? ஜலதோஷமா?

பத்து சக்திமிக்க மருந்துகள் சேர்ந்தது

அமிர்தாஞ்சனம்

உங்களுக்கு உடனடி நிவாரணம் அளிக்கிறது

சக்தி வாய்ந்த பத்து மருந்துகள் கொண்ட அமிர்தாஞ்சனம் வலிகளைப் போக்கி ஜலதோஷத்தை நீக்குவதற்கென்றே பிரத்தியேகமாக தயாரிக்கப்பட்டது. எழுபது ஆண்டுகளாக லட்சக் கணக்கான குடும்பங்களில் பயன்பட்டு வரும் கைகண்ட நிவாரணி அது.

வலிகளுக்கு: தசைவலி, தலைவலி, சுளுக்கு, அல்லது மூட்டு வலி எதுவாக இருந்தாலும், வலியுள்ள இடத்தில் சிறிது அமிர்தாஞ்சனம் தடவுங்கள். சில நிமிடங்களில் நிவாரணம் ஏற்படுவதை உணர்வீர்கள்!

ஜலதோஷத்துக்கும், மார்புச் சளிக்கும்: சாதாரண ஜலதோஷமானால் மூக்கின் உட்புறத்திலும் மூக்கின் கீழும் அமிர்தாஞ்சனம் தடவுங்கள்; அல்லது சிறிதளவு அமிர்தாஞ்சனம் எடுத்து வெந்நீரில் இட்டு, ஆவியை சுவாசியுங்கள். மார்புச் சளியானால், மார்பில் அமிர்தாஞ்சனம் தடவுங்கள். மிகமிக விரைவில் நல்ல நிவாரணம் ஏற்படுவதைக் காண்பீர்கள்.

ஒவ்வொரு முறை பயன் படுத்துவதற்கும் சிறிதளவு அமிர்தாஞ்சனமே போதும்; ஆகவே ஒரு பாட்டில் உங்கள் குடும்பத்துக்கு மாதக் கணக்கில் வரும். அமிர்தாஞ்சனத்தை எப்பொழுதும் கையோடு வைத்திருங்கள்.

அமிர்தாஞ்சனம்
கையடக்கமான, குறைந்த விலை டின்களிலும் கிடைக்கிறது.

அமிர்தாஞ்சன் லிமிடெட்,
மதராஸ்-பம்பாய்-கல்கத்தா-டெல்லி.
am-3769

ஆசிரியர், வெளியிடுபவர் சி. என். ஏ. இளங்கோவன் அவர்களால், காஞ்சிபுரம்-3
36, திருக்கச்சிநம்பி தெரு, அல்லி அச்சகத்தில், அச்சிட்டு வெளியிடப்படுகிறது.